பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 10 வெள்ளிக்கிழமை 26.07.2024 கதிர் 261

# ஜனாதிபதித் தேர்தல் திகதி இன்று அறிவிப்பு

## விசேட வர்த்தமானி வெளியாகும்

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் திகதியை இன்று அறிவிப்பதற்கு முடிவு செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளஆணைக்கு மேற்கண்ட அறிவிப்பை உறுதிபடத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான உத்தரவை வெளியிடும் திகதி, வேட்புமனுக்கள் ஏற்கப்படும் திகதி, தேர்தல் திகதி உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அதி விசேட வர்த்தமானி இன்று வெளியிடப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, தேர்தல் ஆணைக் குழுவின் தவசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, 2024ஆம் ஆண்டுக் கான ஜனாதிபதித் தேர்தல் அறி விப்பை இன்று அரச அச்சு திணைக் களத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதில் வேட்புமனு ☞2

## இது ரகசியம் அல்ல!

ஒரு காலத்தில் கட்சிகளைப் பிளவுபடுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியும்மிரட்டிப்பணியவைத்தும் தம்பக்கம் இழுப்பதில் அலாதி திறன் படைத்தவர்களாக ராஜபக்சக்கள் இருந்தார்கள். குறிப்பாக மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியில் இருந்தபோதுகட்சிகளைஉடைப்பதில், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுத்தெடுப்பதில் அவர் தனித் திறமையோடு இருந்தார்.

யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வராமலா போய்விடும்? இப்போது காலம் மாறிவிட்டது. ஆட்சிக்கு வரும் கனவு களைக்கூட காணமுடியாத தூரத்தில் ராஜபக்சக்கள் இருக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையில்ரணில்விக்கிரமசிங்கதமது கட்சியை உடைக்கிறார், பிளக்கிறார் என்று மகிந்தவின் மகனான நாமல் புலம்புகின்றார். போதாக்குறைக்கு அப்படிச் செய்வது ரணிலின் இயல்பு என்றுவேறு சொல்கிறார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் நேற்று செய்தியாளர்களுடன் நாமல் பேசும்போது இந்தப் புலம்பலைக் கேட்க முடிந்தது.

''ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஆதரித்தோம். தற்போது வரையில் அவருக்கான எமது ஆதரவு தொடர்கின்றது. ☞2

## ஜனாதிபதித் தேர்தலில் பென்சேகாவும் போட்டி

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளார் என்று பீல்ட் மார்ஷல்சரத்பொன்சேகா அறிவித்துள்ளார்.

தனதுஎக்ஸ்கணக்கில் நேற்றையதினம் இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ளார்.

2010 ☞8

## நீதி அமைச்சரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார்

2024 ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக தாம் களமிறங்கவுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புஅமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாசராஜபக்ஷ ☞8

## பிணைமுறி மோசடி இல்லாதிருந்தால் பொருளாதார நெருக்கடி வந்திருக்காது

### ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் காட்டம்

பிணைமுறி மோசடி இடம்பெறாமலிருந்திருந்தால் 2022 ஆம் ஆண்டு எரிபொருள்வரிசைஎன்பதொன்று தோற்றம் பெற்றிருக்காது. பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்று தமக்கும் வங்குரோத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை போல் பேசுகிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம், அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்மீதானவிவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளையும் சட்டமாக்க வேண்டியதேவைகிடையாது. சர்வதேசநாணயநிதியத்தின் ஒத்துழைப்பு இதற்கு முன்னரும் 16 தடவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வங்குரோத்துக்கு பின்னர் 17ஆவது தடவையாக பெறப்பட்டுள்ளது.

பொருளாதார ☞8

## பிரதமர் இன்று நாடாளுமன்றில் விசேட உரை

பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று 26ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இந்த விசேட உரையானது பொலிஸ் மா அதிபர் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஆளும்தரப்பின்பதிலைத்தெரிவிப்பதாக இருக்கும்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பொலிஸ் மா அதிபர் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் தேர்தலை முன்னெடுப்பதில் நெருக்கடிகள் உள்ளதாக குறிப்பிட்டு அமைச்சரவையை ஜனாதிபதி விசேடமாக நேற்று முன்தினம் அழைத்திருந்தமையும்குறிப்பிடத்தக்கது.

## ஊழல் எதிர்ப்பு தேசிய நிகழ்ச்சி நிரலுக்கான ஜனாதிபதி ரணிலின் யோசனைக்கு அனுமதி

சர்வதேச நாணய நிதியத்தின்நிர்வாகக்கண்காணிப்பின்தொழில்நுட்ப உதவி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழலுக்கு எதிரான சட்ட, கட்டமைப்பு ரீதியான மற்றும் படிமுறை வரைவிற்கு அமைவாக 'ஊழல் எதிர்ப்பு தேசிய நிகழ்ச்சி நிரலை' செயற்படுத்துவது குறித்து ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவினால் அண்மையில்சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல், 2023 இல் நிறைவேற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், அதற்கான செயல்திட்டத்தைத் தயாரித்தல், ஆறு மாதங்களுக்குஒருமுறை செயல்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தல்மற்றும் செயல் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் என்பன இந்த யோசனைக்குள் உள்ளடங்கியுள்ளன.

2025- 2029 காலப்பகுதிக்காக தேசிய ஊழல் ☞8

## விக்கிரமபாகு காலமானார்

நவ சம சமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகுகருணாரத்ன காலமானார். முதுமை காரணமாக சுகயீனமுற்றிருந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று அதிகாலை காலமானார் என்று அறிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட அரசியல் வாதியும் சமூக செயற்பாட்டாளருமான விக்ரமபாகு கருணாரத்ன தனது 81ஆவது வயதில் காலமானார். தமிழர்களுக்கு இந்த நாட்டில் சம உரிமை இருக்கின்றது என்பதற்காகத் ☞8

## சிங்கள தேசிய இனத்தில் பிறந்த இனவாதமற்ற பெருமனிதர்

### விக்கிரமாபகு கருணாரத்ன பற்றி சிறீதரன் எம்.பி. புகழாரம்

சிங்கள தேசிய இனத்தில் பிறந்த இனவாதமற்ற பெருமனிதர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண. இந்தநல் மனிதரை இந்த தேசம் இழந்துள்ளது என்று இலங்கைத்தமிழரசுக் கட்சியின் யாழ். ☞8

## ஆளும்தரப்பு நற்செய்தி அறிவிப்புக்களை மக்கள் தகாத வார்த்தையால் விமர்சிப்பு

### நாடாளுமன்றில் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

நற்செய்தி என்று ஆளும்தரப்பு விடுக்கும் அறிவிப்புக்களை மக்கள் தகாத வார்த்தைகளால் கடுமையாக விமர்சிக்கிறார்கள் என்று அரசநிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொருளாதாரநிலைமாற்ற சட்டமூலம், அரச நிதி முகாமைத்துவசட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றியதாவது: ☞8

## விசா விநியோகத்திற்கு எதிராக 3 எம்.பிக்கள் நீதிமன்றில் மனு

வி.எப்.எஸ். குளோபல்விசாவிநியோக விவகாரம்அண்மையில் கடும் சர்ச்சைக்குள்ளாகி இருந்த நிலையில், இந்த விசா வெளிவள உடன்படிக்கையை சவாலுக்கு உட்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், ரவூப் ஹக்கீம், பாட்டலிசம்பிக்க ரணவக்க ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் தனித்தனியாக ☞2

## பொலிஸ் மா அதிபர் விவகாரத்தால் சபையில் நேற்று கடும் வாக்குவாதம்

பதில் பொலிஸ் மா அதிபர் நியமனத்தை அரசமைப்புபேரவையே முன்னெடுக்கவேண்டும் என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்த கருத்தினால் சபையில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் நேற்று கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரதேமதாசஎழுந்து, பொலிஸ் மா ☞8

## அரச நிதி மற்றும் பொருளாதார சட்ட மூலங்கள் நிறைவேற்றம்

அரசநிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதங்களின் பின்னரான திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சி ஆதரவளித்துடன் ☞8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நாட்டுக்கு எதிரான கொள்கைகளை ரணில்முன்னெடுத்தாலும்அவரைச் சங்கடப்படுத்துவதற்கு நாம் விரும்பவில்லை. அரசியல் உறுதிப் பாட்டைச் சீர்குலைப்பதற்கும் நாம் முயற்சிக்கவில்லை.

ஆனாலும் அவர் கட்சிகளை இரண்டாகப் பிளவுபடுத்துகின்றார். இது என்னுடைய குற்றச்சாட்டு அல்ல. ஐக்கிய மக்கள் சக்தியி னரே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத் துள்ளனர். ரணில் எமது கட்சியை யும் பிளவுபடுத்துவதற்கு முயற்சிக் கின்றார். நாம் உண்மை யாகவே அவருக்கு உதவினோம். எமது கட்சி இரண்டாக பிரிக்கப்ப டுமாயின் அதுதொடர்பில் அவரேதான் சிந்திக்கவேண்டும்.

அவருடன் நாங்கள் கோபிக்க வில்லை. கட்சிகளைப்பிளவுபடுத்தும் அவரது செயற்பாட்டைக் கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை. அது அவரின் இயல்பான பழக்கமாகும். அவர் கட்சிகளை பிளவுபடுத்தாமல்இருந்தார்என்றால் தான் ஆச்சிரியப்படவேண்டும்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தினார். சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்தினார். விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்தினார். நல்லாட்சி ஆளும் தரப்பையும் பிளவுபடுத்தினார். மக்கள் விடுதலை முன்னணியையும் உடைத்தார். ஐக்கியமக்கள்சக்தியை பிளவுபடுத்துகிறார். மொட்டுக் கட்சியையும் உடைப்பதற்கு முயற்சிக்கின்றார். எனினும்நாங்கள் நாட்டுக்காக தீர்மானத்தினை எடுப்போம். தனிப்பட்ட ரீதியில் அல்ல. இணைந்தே கட்சியைப் பாதுகாப்போம்" என்றார்.

போகிற போக்கில் புலிகளைப் பிளவுபடுத்திய 'கிரடிட்'டையும் ரணிலுக்கே கொடுத்துவிட்டுப் போய்விட்டார் நாமல். முற்பகல் செய்யின்பிற்பகல்விளையும்என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள். எல்லாமல் ராஜபக்சக்கள் செய்த வினைகளின்பயன்தான்என்றுவிட்டு ரணிலைச் சகித்துக்கொள்வதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது நாமலுக்கு?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி, வேட்புமனுக்கள் ஏற்கப்படும் இடம், ஆகியவை உள்ளடங்கவுள்ளதாகவும்கூறினார்.

செப்டம்பர் 17ஆம் திகதிக்குப் பிறகு மிகவும் பொருத்தமான மற்றும் முதல் சாத்தியமான திகதி தேர்தல் வாக்கெடுப்புத் திகதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றார்.

ஆளும் தரப்பிடம் இருந்து சாத்தியமான நிலமைகள் குறித்து வினவியபோது, ஆளும்தரப்புஎந்தச் செல்வாக்கும் செலுத்தவில்லை என்று கூறிய அவர் தேர்தல்கள் ஆணைக்குழு அரசமைப்பு மற்றும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்திற்கு இணங்க செயல்படுகிறது என்று கூறினார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தும், குற்றச்சாட்டுகளை முன்வைத்தும் வருவதாகக் கூறிய அவர், தேர்தல் பிரகடனத்தை தொடர்ந்து தேர்தல் ஆணையகம் உரிய நடைமுறைகளை பின்பற்றுவதை அனைவரும் பார்க்கலாம் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபர் தேவையா என வினவியபோது, தற்போது பொலிஸ் மா அதிபர் இல்லை எனவும், எனினும், பதில் பொலிஸ் மா அதிபர் அல்லது பொருத்தமான தலைவர் ஒருவர் எதிர்காலத்தில் நியமிக்கப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் தேர்தல் பணியைத் தொடரும் என்றும், தற்போது தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## விசா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள் ளனர்.

இவ்வாறு தாக்கல் செய்யப் பட்டிருக்கும் மனுவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளடங்கலாக 31 பேர் பிரதி வாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

விசா வெளிவள உடன்படிக் கையின் பிரகாரம் இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்குவிசாவிநியோகிக்கும் பொறுப்பு வி.எப்.எஸ். குளோபல் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட விவகாரத்தில் நிலவும் குழறுபடி கள் மற்றும் சட்டவிரோத நடைமுறைகள் குறித்து மனுவில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செயன்முறை மீறப்பட்டுள்ளமை, தேசிய பாதுகாப்பு மற்றும்தரவுப்பாதுகாப்புதொடர்பான கரிசனைகள், சுற்றுலாத்துறை மீதான தாக்கம், சர்வதேச நாணய நிதியத்தின்ஆளுகைநியமங்களுக்கு முரணாகஇருத்தல், பிளெக்ஸ்டோன் மற்றும்குவேனி டிரவலின் தொடர்பு ஆகிய விடயங்கள் மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று சர்ச்சையிலுள்ள உடன்படிக்கையின் அமுலாக்கத்தைத் தடைசெய்து, இறுதித்தீர்மானம் எட்டப்படும் வரையில் முன்பு நடைமுறையில் இருந்த இலத்திரனியல்பயணஇசைவாணை முறைமைக்குத்திரும்பும்வகையில் இடைக்காலத்தடையுத்தரவினை விதிக்குமாறுமனுதாரர்கள்உயர்நீதிமன்றத்தினைக் கோரியுள்ளனர்.

இது குறித்து விளக்கமளிக்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள இம்பீரியல் மொனார்ஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், அரச நிதிபற்றிய குழுவின் உறுப்பினர்கள் என்ற ரீதியில், அக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு தாம் மூவரும் இம்மனுவைத் தனித்தனியாகத்தாக்கல்செய்திருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

இந்த வி.எப்.எஸ். குளோபல் விசா விநியோக சேவையை முற்றுமுழுதான ஊழல் நடவடிக்கையாகவே கருதுகின்றோம். இந்த உடன்படிக்கை வி.எப்.எஸ். குளோபல் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், அதன் பின்னாலுள்ள ஐ.வி.எஸ். உள்ளிட்ட உரித்தாளர்களின் விவரங்கள் தெரியாத நிறுவனங்கள் பகிரங்கப் படுத்தப்படவில்லை. நாம் ஆளும்தரப்பில் அங்கம் வகித்த காலப்பகுதியிலும் நாம் அறியாத வண்ணம்இதுபோன்றமிகப்பெரிய மத்தியவங்கிமோசடிஅரங்கேறியது. அதன் விளைவாக நாம் ஆட்சியை இழக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இருப்பினும் தற்போது இடம்பெற்றுவரும் விசா வெளிவள உடன்படிக்கை ஊழலானது மத்திய வங்கி மோசடியை விடவும் 100 மடங்கு மிகையானதாகும். அந்நளகதமோசடியைப்போன்று இதுவும்தேர்தல்காலப்பகுதியிலேயே நடைபெறுகின்றது. எனவே இது பணச்சுத்திகரிப்பை மேற்கொள்வதற்கான உத்தியா? என்ற சந்தேகமும் எழுகின்றது' எனவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு சுமார் 2.7 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இந்த பொறுப்பு முறையான நடைமுறைகள் பின்பற்றப்படாமல் பிறிதொரு நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும், இதனூடாக இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளிடம் 25 டொலர் அறவிடப்படுவதன் காரணமாக கடந்த ஏப்ரல்மாத நடுப்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாக வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2018 ஆம் ஆண்டின் பின்னர் கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்த சுற்றுலாப்பயணிகளின் வருகை தற்போதுதான்மீண்டும்உயர்வடைய ஆரம்பித்திருப்பதாகவும், இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் முறைகேடான விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும்இந்தஉடன்படிக்கை சுற்றுலாப்பயணிகளின் வருகையிலும், நாட்டின்பொருளாதாரத்திலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விசனம் வெளியிட்டார்.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் உயர்நீதிமன்றம் நீதியை நிலைநாட்டுமென தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், இவ்விவகாரத்திலும், இதனையொத்த ஏனைய ஊழல் மோசடி விவகாரங்களிலும் அவற்றை முறியடிப்பதற்கான தமது முயற்சிகள் தொடரும்எனவும்அவர்தெரிவித்தார்.

# பௌத்த தர்மத்தை திரிபுபடுத்துவது போன்று இலங்கை வரலாறும் திரிபுபடுத்தப்படுகிறது

## நாடாளுமன்ற ஒன்றியத்தில் அது குறித்துக் கலந்துரையாடல்

பௌத்த தர்மத்தைத் திரிபுபடுத்துவது போன்று இலங்கையின் வரலாற்றையும் திரிபுபடுத்தும் 12 நிலயங்கள் இதுவரை இயங்கி வருவதாக தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான நாடாளுமன்ற ஒன்றியத்தில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், பௌத்த மதத்தைத் திரிபுபடுத்தும் 85 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள்என்றும்இங்குதெரிவிக்கப்பட்டது.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான நாடாளுமன்றஒன்றியம்அதன்தலைவர்நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தலைமையில் அண்மையில் கூடியபோது இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் சங்கைக்குரிய ஹாகொட விப்பசி தேரர், வணக்கத்துக்குரிய பேராசிரியர் மாவத்தகம பேமானந்த தேரர், சட்டத்தரனி கல்யானந்த தீரனாகம, சட்டத்தரணி ராஜா குணரத்ன, மதுகம செனவிருவன் மற்றும் கலாநிதி வசந்த பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

'காரக சங்க சபையின' முடிவுக்கு அமைய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காத பிக்குமார் யாராவது துறவறத்திலிருந்து வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் காவியுடை அணிவதைத் தடைசெய்யும் அதிகாரம் காரக சங்க சபைக்கு இல்லையென்பதால் இது குறித்து சட்டரீதியான திருத்தங்களைக் கொண்டு வருவதன் அவசியம் குறித்து இங்கு ஆராயப்பட்டது. அத்துடன் பிக்குமாரின் பெயருடன் காணப்படும் போலி நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பௌத்த தர்மத்தைத் திரிபுபடுத்தல், புத்தர் பற்றிய கட்டுக்கதைகளை பரப்புதல், தேரர்களை இழிவுபடுத்தும் விதத்தில் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் என்பன குறித்து கலந்துகொண்டவர்கள் எடுத்துக்காட்டுகளுடன் இங்கு விரிவாக விளக்கமளித்தனர். பௌத்த தர்மத்தை திரிபுபடுத்தி தொகுக்கப்படும் நூல்கள் பெருமளவில் பிரபல்யப்படுத்தப்படுவதாகவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவற்றைத் தடுப்பதற்கான அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கமைய, இன்னும் இரண்டு கூட்டங்களின் பின்னர் குறித்த பரிந்துரையை அறிவுறுத்தலாகத் தயாரித்து மகாநாயக்க தேரர்களுக்கு அது குறித்துத் தெளிவுபடுத்தி அவர்களின் முன்மொழிவுகளையும் பெற்று நாடாளுமன்றத்தில் அதனை முன்வைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஒன்றியத்தின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

# நாட்டைச் சீரழித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்

## நாடாளுமன்றத்தில் சஜித் சூளுரை

நாட்டைச் சீரழித்த அனைவரையும் சட்டத்துக்கு முன்கொண்டுவருவோம். நாட்டில் திருடிய அனைத்து பணத்தையும்மீண்டும்நாட்டுக்குக்கொண்டுவருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலைமாற்ற சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் இதனைக்குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச் செய்தவர்கள், தற்போது எங்களுக்கு தர்ம போதனை செய்கிறார்கள். எங்களுக்கு போதனை செய்வதற்கு முன்னர் தரமத்தின் பிரகாரம் அவர்கள் முதலாது செயற்படவேண்டும். பொருளாதாரச் சவாலை ஏற்றுக்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தச் சவால் நிலையை ஏற்படுத்தியவர்கள் யார்? கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆளும்தரப்பின் பிழையான, முட்டாள்தனமான தீர்மானங்கள் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது.

நாட்டை வங்குரோத்து அடையச் செய்து நாட்டை சீரழித்த திருடர்களுடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் முன்வராதமை நாங்கள் செய்த பாவம் என இவர்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பாவத்தை சுமக்க நாங்கள் விருப்பவில்லை. பொருளாதாரத்தை வீழ்ச்சியடை காரணமானவர்கள் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இவர்கள் மறந்துள்ளனர். கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, எஸ்.ஆர். ஆட்டிகல, பீ,பீ. ஜயசுந்தர ஆகியோர் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்து நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறியதற்குப் பொறுப்பானவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

நாங்கள் மக்கள் ஆணை ஒன்றைபெற்றுக்கொண்ட பின்னர், இன்றைய ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை, மக்கள் நலனுக்காக மீள் பரிசீலனைக்கு செல்வோம். நாணய நிதியத்துடன் மிகவும் சிநேகபூர்வமான முறையில் இதுதொடர்பில் நடவடிக்கை எடுப்போம். நிச்சியமாக அந்த நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம். இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய மாற்றுத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்திக் கூட்டணியிடம்தான் இருக்கிறது. வங்குரோத்து அடைந்துள்ள நாட்டில் ஊழல் மோசடி செய்தும், எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தம்மோடு இழுத்துக்கொள்வதற்கா மதுபானசாலை அனுமதி பத்திரம் வழங்கியும் செயற்படும் இந்த ஆளும் தரப்பினரால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

அதனால் நாங்கள் நாட்டை கட்டியெழுப்ப முடியுமான அனைத்து துறைகளையும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுப்போம். ஆளும்தரப்பு தற்போது சமர்ப்பித்துள்ள பொருளாதார நிலைமாற்ற சட்டத்தில் முழுமையான இணக்கப்பாடுஎமக்குஇல்லை. அதனால்எமதுஆட்சியில் இந்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வோம். அதேபோன்று நாட்டைச் சீரழித்த அனைவரையும் சட்டத்துக்கு முன்கொண்டுவருவோம். நாட்டில் திருடிய அனைத்து பணத்தையும் மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவருவோம்என்றஉறுதியைநாட்டுமக்களுக்கு தெரிவிக்கிறோம் என்றார்.

# போராட்டம் தொடர்கிறது

ஆசிரியர், - அதிபர் தொழிற்சங்கங்களின் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்கப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

சம்பளமுரண்பாடுஉள்ளிட்டபிரச்சினைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை கவனம்செலுத்தவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணத்தில் 3 நாள்கள் சர்வதேச புத்தகத் திருவிழா

'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024' யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் ஒகஸ்ட் 9 முதல் 11 வரையில் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்றைய தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தகவிற்பனைநிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன.

நாம் நமது உடலுக்கு உடற்பயிற்சி செய்வது போல, வாசிப்பு என்பது நம் மனதுக்கும் புத்திக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது.

அதிவேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் நமது சமூகத்தில் வாசிப்பு கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது. அந்த வகையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாசிப்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான புத்தகங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்கவேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு. உள்நாட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஆர்வமும் பங்குகொள்ள விருப்பமும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் பல புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன ஆனால் யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் இந்தப் புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. இக் கண்காட்சி வடமாகாணத்தை சேர்ந்த நூலகங்கள், சனசமூக நிலையங்களுக்கும் இந்த புத்தகத் திருவிழா நல்லதொரு வாய்ப்பாக அமையும் என நாம் கருதுகிறோம். பாடசாலைகள் ட தமது நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களை இந்த புத்தக திருவிழாவில் பெற்றுக்கொள்ள முடியும்.

புத்தக திருவிழா இடம்பெறும் தினங்களில் புத்தக வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என்பவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வடமாகாணத்தை சேர்ந்த அனைத்து மக்களும் இந்த நிகழ்வில் பங்குபற்ற கூடியவாறு இது அமையப்பெற்றுள்ளது.

இக் கண்காட்சி முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும். 40 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும். அவற்றில் உள்ளூர் வெளியூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்தவுள்ளோம்எனஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளனர்.

## சிறைச்சாலை அலுவலர்களை தாக்கிக் காயப்படுத்திய கைதி

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தும்பறை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர், மற்றுமொரு வழக்கு தொடர்பாகமட்டக்களப்புநீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டபோதுஇரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்களைத் தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்தியுள்ளார்.

காயமடைந்த அதிகாரிகள் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தும்பறை சிறைச்சாலையில் இருந்து மஹியங்கனை வீதியூடாக மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதி, சிறைச்சாலை அதிகாரி மற்றும் சிறைக்காவலர் ஆகியோரை தாக்கியுள்ளார்.

இதனையடுத்து சிறைச்சாலை பஸ் தும்பறை சிறைச்சாலைக்கு திரும்பியதுடன் அதிகாரிகள் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைதிபலத்தபாதுகாப்புடன்மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## ஜே.வி.பியின் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக சிஐடி விசாரணை தொடக்கம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஜே.வி.பி மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்த கருத்து தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஹட்சன் சமரசிங்க செய்த முறைப்பாட்டின்அடிப்படையில்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான காணொளிகள் மற்றும் ஒலி நாடாக்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் பெறப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. சமூக ஊடகங்களில் பரவி வரும் அச்சுறுத்தும் காணொளி காட்சியின் அடிப்படையில் ஹட்சன் சமரசிங்க இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினரானமுன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவின் கூற்று, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுக்கு மரண அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துலகுணவர்தனபாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேர்தலில்கொடுக்கல்வாங்கல்களை நிவர்த்திசெய்வதாகவும்நாட்டைவிட்டுச் செல்ல இடமளிக்கப்படாது, ஒளிந்து கொள்ளவும் இடம் கிடைக்காதென, வசந்த சமரசிங்க மேற்கொண்டுள்ள அச்சுறுத்தல் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவருக்கு இவ்வாறானஅச்சுறுத்தல்விடுக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்து அவருக்குத் தேவையான பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்தார்.

## முறையான முகாமைத்துவத்தின் கீழே அரச சொத்துக்களை கொண்டு வர தயார்

### நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

அரச சொத்துக்கள் முகாமைத்துவ சட்டத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துக்களையும்விசாரணைசெய்து முறையான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தயார் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

1600க்கும் மேற்பட்ட ஆளும்தரப்புக்குச் சொந்தமான நிறுவனங்கள் உள்ளதாகவும், அவற்றின் சொத்துக்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிறுவனங்களில் சுமார் 91,000 வாகனங்கள் இருப்பதாகவும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க ஆளும்தரப்பு தயாராக இருப்பதாகவும்அமைச்சர்குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மக்களின்வாழ்க்கைத் தரத்தைமேம்படுத்தபலநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதாரச் சீர்திருத்தம் தொடர்பான சட்ட கட்டமைப்புகள் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும் எனவும், ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் அமையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அரசமைப்புக்கு மாறாகச் செயற்பட்டு தேர்தலைப் பிற்போடவேமாட்டோம்

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

தேர்தலைப் பிற்போடுவதற்காக ஆளும்தரப்பு ஒருபோதும் அரசமைப்பிற்குப் புறம்பாகச் செயற்படாது என்று ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை பிற்பகல் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்ற விவாதம் நாட்டில் நிலவி வருகிறது. அத்துடன், பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது குறித்தும் கலந்துரையாடப்படுகிறது. ஆனால் ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாம் முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்பதை முதலில் கூறவேண்டும். அரசமைப்பு ரீதியாகத் தேவையானது ஜனாதிபதி தேர்தல். நாட்டில் உறுதியற்ற நிலை ஏற்படும்போது, அது நேரடியாக மக்களைப் பாதிக்கிறது. எனவே இந்த நாட்டுக்கு நிலையான ஆளும்தரப்பொன்று தேவை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலை நடத்தலாம். அரசமைப்பிற்கு புறம்பாக செயற்பட்டு தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் உள்ளது.

இரண்டுவருடங்களுக்குமுன்2022ஆம்ஆண்டு மே மாதம் இந்த நாட்டில் இருந்த நிலைமையை நாம் அனைவரும் புரிந்துகொண்டோம். மக்கள் வீதிகளில் எரிபொருள் வரிசை மற்றும் எரிவாயு வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஒரு காலத்தில் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல்போனது. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் எங்களுக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதி பிரச்சினைகளால் நாங்கள் எதிர்கொண்ட சூழ்நிலையை நாங்கள் நினைவில்கொள்ளவேண்டும்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க மட்டுமே சவாலை ஏற்றுக்கொண்டார். ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாடாளுமன்றத்தில் சிறு குழுவாக நாங்கள் உதவி செய்தோம். அனுபவத்துடனும், முதிர்ச்சியுடனும், சவால்களை ஏற்கும் திறமையுடனும் அந்த வேலையைச் செய்வார் என்று நாங்கள் நம்பினோம்.

இரண்டு வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கும்போது, நாம் எதிர்பார்த்ததைச் செய்திருக்கிறார். இப்போது ரணில்தான் ஆள் என்ற கருத்து கிராம மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அப்படியானால், அன்று நாங்கள் எடுத்த முடிவு சரியானது என்று நினைக்கிறோம்.

நாட்டுக்கு நல்ல செய்தியைக் கூறும்போது, இந்தநாட்டில்உள்ளஒவ்வொருநம்பிக்கையுள்ள மனிதனும் நல்லதைக் காண்கிறான். அதை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னொரு கூட்டத்தினர் நல்ல செய்தி சொன்னால் அதை பாசாங்குத்தனத்துடன் பார்க்கிறார்கள்.

வீதியோரம் ஒட்டப்படும் போஸ்ட்டர்கள் மூலம், நாட்டை நேசிக்கும் மக்களுக்கும், இந்த நாட்டை அழிக்க நினைக்கும் மக்களுக்கும் இடையிலான பிரிவினையை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

2023 மார்ச்சில் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு முதல் தவணையை பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, இது போன்ற வேலைநிறுத்த அலைகளை ஏற்படுத்தியது. ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது. சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கிய நேரத்தில், கொவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டை மூட வேண்டியிருந்தது. நாட்டை திறந்துவிட்டு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியதும் தொழிற்சங்கத்தினர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை வரவிடாமல் தடுத்தனர். இன்று ஒரு நல்ல செய்தி வரவிருக்கும் நேரமும் இவ்வாறு செய்கின்றனர்.

அதை அழித்து வேறாக மாற்ற வேண்டும் என்று இன்று வேலை நிறுத்த அலை நடத்தப்படுகிறது. கடந்த காலத்தில் இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் அரச ஊழியர்கள் சில சிரமங்களுக்குள்ளாகியிருந்ததாக நான் நம்புகிறேன். ஆனால் கொவிட் தொற்றுநோய்களின் போது நம் நாட்டின் தனியார்துறைகூடச்சரிந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஊழியர்களின் சம்பளம் கூட குறைக்கப்பட்டது. ஆனால் அரசு அதைச் செய்யவில்லை. அரசு அரச ஊழியர்களை முடிந்தவரை பாதுகாத்தது.

அதனைச் செய்த அரச அதிகாரிகள், தமது சம்பளத்தை இப்போதாவது அதிகரிக்கவேண்டும் என்ற நம்பிக்கையில், இந்தச் சம்பளப் பிரச்சினைகளை ஆராய ஜனாதிபதி குழுவிருக்கும்போது, அந்தக் குழுவின் ஊடாக தமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் எனத் தெரிந்தும், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த இந்த வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள். அவர்களின் வேலையினால் தான் நாங்கள் இவ்வாறான ஆர்ப்பாட்டம் நடத்துவதாக கூறுகிறார்கள்.

இந்த சம்பள முரண்பாட்டை ஜனவரி 2025 க்குள் தீர்க்க ஒரு குழுவை அமைத்து 3 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு கூறியுள்ளோம். தருகிறோம் என்று சொன்னாலும், பிரான்ஸ் மாநாட்டின் மூலம் நம் நாட்டிற்கு கிடைக்கும்சலுகையை குறைத்து, அரசசேவையை நல்ல நிலைக்கு கொண்டு செல்லும்போது, இந்த நாட்டை அராஜகமாக்கி, மீண்டும் சீரழிக்க இவர்கள் எல்லாம் செய்கிறார்கள். பொருளாதார ரீதியாக அவர்களின் நிகழ்ச்சி நிரலை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எனவே, இதனை இந்நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாகப் பார்ப்பார்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழரின் ஆத்ம தோழனின் மறைவு ஈடுசெய்யப்படமுடியாத ஒரு பேரிழப்பு

**இலங்கையில் தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த உன்னதமான ஆத்மாவை இழந்துள்ளது தமிழ் இனம். அவர் தமிழர் அல்லாதவர், சிங்களவர் என்பதே கவனத்திற்குரியது.**

**நவசமசமாஜகட்சியின்தலைவர், உண்மையானஇடதுசாரி, தமிழர்களின் உற்ற தோழன், நீதியான சிந்தனையாளன் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன காலமானார். முதுமை காரணமாக சுகயீனமுற்றிருந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று அதிகாலை காலமானார் என்று அறிவிக்கப்பட்டது.**

**தனது 81ஆவது வயதில் அவர் இந்த உலகத்தைப் பிரிந்தார். அவரது இழப்பு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இட்டு நிரப்ப முடியாத பிரிவு.**

**1943 மார்ச் 8 பிறந்த கேம்பிரிட்ஜ் கல்வியாளரான இவர், இலங்கை விஞ்ஞானியுமாவார். அவரது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். அவர் தனது இடைநிலைக் கல்விக்காக கொழும்பு ஆனந்தா கல்லூரிக்குச் செல்வதற்கு முன்னர் மத்துகம ஆனந்த சாஸ்த்ராலயாவில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார் . அதன்பின் அப்போதைய சிலோன் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான அவர் அங்கிருந்து மின் பொறியியலில் சிறந்த பெறுபேற்றுடன் பட்டத்தைப் பெற்றார்.**

**கொமன்வெல்த் உதவித்தொகை மூலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்க வாய்ப்புப் பெற்ற அவர், 1970 இல் கலாநிதிப் பட்டத்தை பெற்றார். அதனைத் தொடர்ந்து மீண்டும் இலங்கை வந்த அவர் தனது கல்வி மற்றும் அரசியல், சமூக சேவை வாழ்க்கையைத் முன்னெடுத்தார். தொடக்கம் முதலே அவரது அரசியல் ஒடுக்கப்பட்டவர்களின் பாற்பட்டதாக இருந்தது.**

**இடதுசாரித் தத்துவத்தை வரிந்துகொண்டபோதும் அரசியலுக்காகவும் வாக்குகளுக்காகவும் சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் சோடைபோன மற்றைய இடதுசாரித் தலைவர்களைப் போன்றல்லாமல் தன் கொள்கையில் தளராத பிடிமானத்தோடு இறுதிவரை நிலைத்து நின்றவர் விக்கிரமபாகு. அவர் வாக்குகளுக்காக சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த ஒருபோது முன்வந்தவரல்லர். நீதி, நியாயத்தின் பாற்பட்டு நின்றார். உண்மையை சிங்களவர்களுக்கும் எடுத்துச் சொன்னார். அதனாலேயே அவர் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்க தலைவராக முடியாமல் போனது.**

**இனவாதத்தை ஒதுக்கிவைத்துவிட்டு நியாயமாக தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகிய அவர், அந்த நியாயத்தை சிங்களவர்களுக்குச் சொல்வதற்கும் தயங்கியதில்லை. அனாலேயே தெற்கில் பேரினவாதிகள் அவரை ஒரு துரோகியாகவும் சித்தரிக்கத் தயங்கியதில்லை. அதுபற்றி விக்கிரமபாகு அலட்டிக் கொண்டவரல்லர். தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் கடைசிவரை தமிழர்களின் தாயகம், சுயாட்சி உரிமை, தனி இனக் கொள்கைகளை ஆதரித்து வந்தார்.**

**சிங்கள ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்திற்கும் எதேச்சதிகாரத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகத் தொடர்ந்து சளைக்காமல் குரல்கொடுத்து வந்தார். இரண்டு தடவைகள் அவர் அரசுத் தலைவர் தேர்தலிலும் போட்டியிட்டார். எனினும் சிங்களவர்கள் அவரை ஆதரிக்கவில்லை. தமிழரின் வன்முறைசார் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தவரல்லர் அவர். ஆனால் அந்த நிலைக்குத் தமிழர்களைத் தள்ளிவிட்டது சிங்களப் பேரினவாத அரசுகளே என்பதைச் சொல்லத் தயங்கியவருமல்லர். நாட்டின் பேரழிவுக்கும் போருக்கும் அமைதிச் சிதைவுக்கும் மூலகாரணம் சிங்கள பௌத்த பேரினவாதச்சிந்தனைகளேஎன்பதையும்அவர்சிங்களவர்கள் மத்தியிலேயே எப்போதும் உரத்துச் சொல்லி வந்திருக்கிறார்.**

**அப்படிப்பட்ட மனிதரை இழந்திருப்பது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பு. கடந்த 15 ஆண்டுகளில் தமிழர்கள் இழந்திருக்கும்மூத்ததலைவர்கள்மத்தியில்விக்கிரமபாகுவுக்கும் முதன்மையான இடம் எப்போதும் உண்டு.**

# அடுத்தது என்ன?

## என் சத்திய மூர்த்தி

தமிழ் தேசிய பேரவை என்ற பெயருடன் தொடங்கி, இப்போது தமிழ் தேசிய பொதுகட்டமைப்பு என்று பெயர் மாறி உருப்பெற்றுள்ள அமைப்பு ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணவோட்டத்திற்கு வடிகால் அமைத்துள்ளது. இது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் வைபவத்தை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம்.

மற்றபடி கோட்பாடுகளும் செயல்பாடுகளும் எவ்வாறு இருந்தாலும், 'பொதுகட்டமைப்பு' என்ற இந்த அமைப்பின் முன்னால் உடனடியாக உள்ள நிர்பந்தங்கள் தெளிவாகவே தெரிகின்றன. யாழ்பாண பொதுமேடையில் அறிவித்தது போல, துணைக்குழுக்களை அமைத்து, தங்களுக்குள் பொதுவேட்பாளர் யார் என்று முடிவு செய்து அவரை தங்களுள் அனைவரும் ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

அல்லது, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு தலைவரை பொது வேட்பாளராக முடிவு செய்து அறிவிக்க வேண்டும். பொதுக் கட்டமைப்பில் பங்குபெறும் சிவில் சமூகத் தலைவர்கள் தேர்தல் அரசியலில் நேரடியாகப் பங்கு பெறமாட்டார்கள் என்ற அறிவிப்பு ஒருபுறம் இருந்தாலும், பொது வேட்பாளர் என்பவர் அரசியல் தலைவராக தான் இருக்கவேண்டும் என்றில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக, அவரும் ஒரு சிவில் சமூக பிரதிநிதியாக இருக்கலாம். ஆனால், பொது வேட்பாளர் என்ற தோரணையில் தனக்கு என ஓர் அரசியல் எதிர்காலத்தை அவர் அமைத்துக் கொள்ளக்கூடாது என்பது ஒரு உறுதி மொழி.

அந்த உறுதிமொழியை கொடுக்க வேண்டிய தலைவரே இன்னமும் அடையாளம் காணப்பட வில்லை. அதன் பின்னர் இருக்கிறது, அவர் அந்த உறுதிமொழியைக் காப்பற்றுவது!

இதைவிட முக்கிய விடயம், தற்போதைய தமிழ் சமூக-அரசியல் சூழலில், தனக்கென்று மக்கள் மனதில் ஒரு இடத்தை பிடித்துள்ள தலைவர் இருக்கிறாரா, என்ன? வேலன் சுவாமிகள் போன்ற மத தலைவர்களின் பெயர் பொது வேட்பாளருக்கு என்று ஒரு சுற்று வந்தாலும், அப்போதே, தமிழ் மக்களைப் அது மத ரீதியாகப் பிரித்துவிடும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் அந்த விவாதம் முடிவிற்கு வந்தது.

### எளிதான காரியமா?

இந்தப்பின்னணியில், பொதுவேட்பாளர் ஒருவரை தேர்ந்தெடுப்பது என்பது எளிதான காரியமா, என்பது தெரியவில்லை. ஆனால், இந்தத் தடையை தாண்டிவிட்டால், பொதுவேட்பாளர் என்ற கருத்திற்கு தமிழ் மக்களிடையே, குறிப்பாக வாக்காளர்களிடையே ஆதரவு திரட்டுவது என்பது ஒப்பீட்டளவில் எளிதாகிவிடும். ஆனால், பொதுவேட்பாளரை முடிவு செய்வதில் முட்டுக்கட்டைகள் தோன்றினால், அதுவே மக்களிடையே மனகசப்பிற்கு வழிவகுக்கும்.

இதுவே, பொது வேட்பாளருக்கான சின்னம் குறித்த பிரச்சினைக்கும் பொருந்தும். காரணம், விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி, 'மான்' சின்னத்தை தனதாக்கி கொண்டுள்ளது. முன்பு தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்து பிரிந்து தற்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக செயல்படும் கட்சிகளும் 'குத்து விளக்கு' சின்னத்தை தனதாக்கிக் கொண்டுள்ளன.

இந்த இரு அணிகளுமே, புதிய கட்டமைப்பிற்குள் ஐக்கியமாகி உள்ளன. அல்லது அதுதான் எதிர்பார்ப்பு. அவர்களுடன், சிவில் சமூக பிரதிநிதிகள் ஒன்று கூடி தங்களுக்குள் ஓர் அமைப்பை உருவாக்கிக்கொண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டுள்ளன. உண்மையை கூறவேண்டுமானால், புதிய பொதுகட்டமைப்பு உருவாவதற்கு, முன்னாலும் பின்னாலும்பக்கவாட்டுகளில்என்றுஎல்லாமுமாகக்கூட இந்த சிவில் சமூக பிரதிநிதிகளே முயற்சி எடுத்து செயலாற்றினர்.

முதலில் அவர்கள் தங்களை மட்டுமே உள்ளடக்கிய 'தமிழ் மக்கள் பொதுசபை' என்ற அமைப்பை உருவாக்கிக் கொள்வதாக அறிவித்தனர். இந்த பொதுசபை உறுப்பினர்களே, அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு, 'பொதுகட்டமைப்பு' என்ற வேறொரு அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

இதில், தமிழ் பொதுசபையை பிரதிநிதிபடுத்திய யாருமே, எந்தவொரு பெரிய, உறுப்பினர் சார்ந்த அமைப்புகளையும் சேர்ந்தவர்கள் இல்லை. பச்சையாக சொல்லப்போனால், அவர்கள் தங்களை மட்டுமே பிரதிநிதிப்படுத்திக் கொண்டார்கள். ஏதோ ஒரு விதத்தில், இப்போதோ, எப்போதோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைப்பு சார்ந்த தொண்டர்களை கொண்ட தமிழ் அரசியல் கட்சி தலைமைகள் எவ்வாறு சரி சமமாக அவர்களை ஏற்றுக்கொண்டன என்பதே பெரிய கேள்வி.

வட இலங்கை, அதிலும் குறிப்பாக யாழ்பாணம் உள்குத்து அரசியல் குறித்து அறிந்தவர்கள் இத்தகைய கேள்வியை எழுப்பினால், அதற்கு பதில்கிடைக்காது. அதற்கான பதிலும் கிடைக்காது. யாரோ ஒருவருடைய நிர்பந்தத்திற்காகவே, அரசியல் கட்சி தலைமைகள் தலையாட்டி வைத்தார்கள் என்றே தோன்றுகிறது. அல்லது, இதன் மூலம் நாடாளுமன்ற தேர்தலில், தங்களது ஒருமித்த வாக்குகள் மூலம் தத்தமது ஆசனத்தை மீண்டும் பெற்றுவிட முடியாதா, என்ற பேராசையும்கூட அவர்களில் சிலருக்கு இருக்கலாம்.

### சுயநிர்ணய உரிமை

இவர்கள் அனைவரைப் பொறுத்த வரையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் சரி, பொதுகட்டமைப்பும் சரி, பொது வேட்பாளரும் சரி, அனைத்துமே காலத்தின் கட்டாயம். சிவில் சமூகத்தவர்களை உள்கொண்ட தமிழ் பொதுசபையைப் பொறுத்தவரையில், இனப்போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் முடிந்தும் தீர்வு காணமுடியாத இனப்பிரச்சினைக்குக் கருத்தியல் சார்ந்து 'சுயநிர்ணய உரிமை' என்ற கோரிக்கை மூலம் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பதே முக்கிய எண்ணவோட்டமாக இருந்திருக்க முடியும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில், விடுதலை புலிகள் அமைப்பின் வீழ்ச்சிக்கு பின்னரும், மிதவாத தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் தீர்வு திட்டம் ஒன்றை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையே நிலவி வந்துள்ளது. அவர்களில் பலரும் மறந்துவிட்ட விடயம், இனப்போர் முடிந்த அடுத்த ஆண்டே, அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி, அதில் ஓரளவு முன்னேற்றமும் காணப்பட்டது. ஆனால், இடையில் நுழைந்த அன்றைய சிவில் சமூகத்தினர், ஆளும் தரப்புடனான பேச்சுக்கு 'பிரேக்' போடும் விதமாக, பொறுப்பு கூறல் மற்றும் போர் குற்றங்கள் குறித்த விடயங்களை சர்வதேச தளத்திற்கு எடுத்துச் செல்வதிலேயே குறியாக இருந்தனர்.

இன்று மிதவாதம் பேசி, பதிமூன்றாவது தீர்வு திட்டத்தின் கீழ் பொலிஸ் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்று வாதம் செய்யும் சுமந்திரன் போன்றோர், அன்று தவறு செய்தார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

### மந்திரத்தில் மாங்காய்

அன்று முறிந்த பேச்சு பின்னரெல்லாம் ஆளும்தரப்பு மற்றும் சிங்கள அரசியல் தரப்புகளின் வாய்ஜாலத்திலேயே முடிந்துள்ளது. அதுவே, நல்லாட்சி அரசில் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசமைப்பு சட்டம் என்ற 'மந்திரத்தில் மாங்காய'; கதையாகவே மாறியது. அதுவும் எதிர்பார்க்கபட்டதுதான்.

இன்று, சுயநிர்ணய உரிமை என்று உயிர்த்தெழுப்பிக்கப்படும் கருத்தியல் வாதத்திற்கான அடிக்கோள் இனப்போர் முடிந்த காலத்திலேயே இடப்பட்டது. அதுவே வேறுவேறு காலகட்டங்களில் வேறுவேறாக உருப்பெற்று, இன்று பூனை வெளியே வந்துள்ளது. ஆனால். சமகால சூழலில், இந்தக் கோரிக்கை வலுப்பெறுமா, என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த ஒன்றிரண்டு ஆண்டு காலத்தில், தமிழ் அரசியல் கட்சிகள் தங்களது சொந்த பூமியான யாழ்பாணத்திலும் வட மாகாணத்திலும், அழைப்பு விடுத்த போராட்டங்கள் எல்லாமே பிசுபிசுத்துப்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# அடுத்தது என்ன?

4ம் பக்க தொடர்ச்சி...........

போன நிலையில், புதிய முயற்சிகளின் வெற்றியும் கேள்வி குறியே. இன்னும் சொல்லப்போனால், அன்று தந்தை செல்வா அரங்கில் முன் வரிசையில் அமர்ந்திருந்த வயோதிக தலைவர்களின் முகத்தில் எந்தவித எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. அவ்வாறு அவர்களில் சிலர் தாங்கள் வயோதிகர்கள் இல்லை என்று கூறினால், அவர்களும் கூட தத்தமது கட்சிகளில் பழைய தலைவர்களாகி விட்டார்கள் என்பதே உண்மை.

என்ன, பொது வேட்பாளர் அதிக தமிழ் வாக்குகளை பெற்றுவிட்டால், அதனையே தங்களுக்கு அத்தாட்சியாக்கிக்கொள்ள நினைப்போர் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால், அதன் காரணமாகவே, தமிழ் இளைய தலைமுறையின் எண்ணவோட்டம் வேறு விதமாக தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் சித்தரிக்கப்படும் என்ற எண்ணம் தோன்றினால், அவ்வாறான சித்தரிப்பை விரும்பாத தமிழர்கள், எடக்கு மடக்காக முடிவெடுத்து, வாக்களிக்காமலே போகலாம். அல்லது, தென்னிலங்கை வேட்பாளர்கள்யாருக்காவதுதங்களதுவாக்கைச்செலுத்துவதன் மூலம் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கலாம்.

இன்று, பொது வேட்பாளார் திட்டத்தை கருத்தியல் ரீதியாக தென்னிலங்கைக்கான பதில் என்றும், சர்வதேசத்திற்கான செய்தி என்றும் நினைத்து செயல்படுபவர்கள், இவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தார்களா, என்பது தெரியவில்லை. காரணம், புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த நிகழ்வில்கூட அதிக எண்ணிக்கையில் தமிழ் மக்களோ, ஏன், பல்வேறு கட்சி உறுப்பினர்களோ கலந்துகொண்டதாக செய்திகளோ, பத்திரிகை புகைபடங்களோ இல்லை.

பங்குபெற்ற இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் முகத்திலும் ஈயாடவில்லை. அவர்களுடைய உடல்மொழியும் எந்தவிதத்திலும் உற்சாகமூட்டுவதாகவோ, நம்பிக்கை ஊட்டுவதாகவோ தெரியவில்லை. ஏதோ, போகிற போக்கில், இங்கே வந்து இரண்டு மணித்தியாலம் நேரம் கடத்தி போகலாம் என்ற அளவிலேயே அவர்களுடைய பங்களிப்பு இருந்தது.

### இரண்டாம் நிலை பிரஜை

இது இவ்வாறிருக்க, புதிய அமைப்பில், குறிப்பாக தமிழ் அரசு கட்சி பங்குபெறாதது குறித்து சமூக வலைதளங்களில் பேச்சு அடிபடுகிறது. விக்னேஸ்வரன் கட்சி கூட்டத்தில், 'தமிழ் தேசிய' ஒற்றுமை முயற்சிக்கு ஆதரவு தெரிவித்த சிறீதரன், பொதுகட்டமைப்பு துவங்கப்பட்ட விழாவில் பிரசன்னமானதாக செய்திகள் இல்லை.

இவரது எதிரணியில், தமிழ் பொது வேட்பாளர் என்ற எண்ண ஊற்றையே எதிர்க்கும் சுமந்திரன் போலானோருக்கு, அழைப்பு விடுக்கப்பட்டதா, என்று தெரியவில்லை. அவ்வாறிருந்தாலும், அவர்களில் யாரும் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. பொதுகட்டமைப்பில் தமிழ் அரசு கட்சி பங்கேற்குமா, என்பது குறித்து அடுத்த மாதம்தான் கட்சி தலைமை கூடி பேசி, முடிவெடுக்கும் என்று சிறீதரன் முன்னரே அறிவித்தார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் அரசுக் கட்சி பொதுகட்டமைப்பினுள் உள்வாங்கப்படுமேயானால், அந்தக் கட்சி. இரண்டாம் நிலை பிரஜையாகவே பார்க்கப்படும். முன்பு, உடைந்துபடாத கூட்டமைப்பில், தமிழ் அரசு கட்சியினர் தாங்களாகவே எடுத்துக்கொண்ட முன்னுரிமைகள் இனி கிடைக்காது. எதிர்பார்க்கவும்கூடாது.

அது போன்றே சம்மந்தன் என்ற தனி மனிதர், தனது ஆளுமைஅதிகாரத்தால், தனக்கெனபெற்றுக்கொண்ட 'வீட்டோ' எனப்படும் தடுப்பதிகாரத்தை, தமிழ் அரசு கட்சியோ, மாவை, சிறிதரன், சுமந்திரன் போன்ற எந்தவொரு தலைவருமோ, தனியாகவோ, கூட்டாகவோ இனி எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர்பார்க்கவும் கூடாது.

ஏன், முன்பெல்லாம் இருந்ததுபோல், பொதுகட்டமைப்பின் பொது வேட்பாளர் தமிழ் அரசு கட்சியின் 'வீடு' சின்னத்தில்தான் போட்டியிடவேண்டும் என்ற எண்ணவோட்டத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும்கூட இங்கு இடமில்லை. இன்னும் சொல்லப்போனால், பொது வேட்பாளர் 'வீடு' சின்னத்தில் போட்டியிடகூடாது என்று முனைந்து செயல்படுபவர்கள், இப்போதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, பொதுகட்டமைப்பில் முன்னுரிமை பெற்றவர்களாக தங்களை அடையாளம் காட்டுகிறார்கள்.

தமிழ் அரசுக் கட்சியை விடுங்கள். தங்களோடு ஏதோ ஒருவிதத்தில் ஒரே கருத்துடைய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினை பிரதிநிதிபடுத்தியும் எந்த தலைவரும் பொதுகட்டமைப்பின் தொடக்க விழாவில் பங்கெடுத்ததாக செய்திகள் இல்லை. பொன்னம்பலம் உடல் நலகுறைவு காரணமாக வெளிநாட்டில் இருந்து மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக மட்டுமே, கட்சி, யாழ் பொதுகூட்டத்தில் பங்கெடுக்கவில்லை என்றால் அது ஒரு விடயம். ஆனால், கொள்கை அல்லது தலைமைத்துவ பிரச்சினைகளை எதிர்பார்த்து, அதன் காரணமாகவே, மக்கள் முன்னணி யாழ் கூட்டத்தில் பங்குபெறவில்லை என்றால், அது பிறிதொரு விடயம்.

### பிழை விட்டோம்

இப்போது, அமெரிக்காவில் இந்திய வம்சாவளி தமிழரான கமலா ஹாரிஸ் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பும் சூழ்நிலையும் உருவாகி உள்ளது. அவர் சார்ந்த ஜனநாயக கட்சியினர், சிறுபான்மையினர் உரிமைகள், மனித உரிமைகள் விடயங்களில் ஆதரவு நிலை எடுத்து வருபவர்கள். இதன் காராணமாக கமலா ஹாரிஸ் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், தங்களுக்கு ஆதரவான நிலையை எடுப்பார் என்ற எண்ணம், 'தமிழ் தேசியம்' பேசும் உள்நாட்டவர்களிடையேயும் புலமபெயாந்தோரிடமும் மீண்டும் துளிர்விட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, கமலா ஹாரிஸ் ஜனாதிபதி ஜோ பைடனின் உதவி ஜனாதிபதி அல்லது பிரதி ஜனாதிபதியாக பதவியேற்ற போதும், இது போன்ற எண்ணவோட்டம் இந்த இரு தரப்பினரிடமும் இருந்தது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில், இனப்பிரச்சினை குறித்து, அவர் ஒரு முறைகூட வாய் திறந்ததாகச் செய்திகள் இல்லை. இலங்கையை விடுங்கள், நான்கு ஆண்டுகளில் ஒரு முறை கூட 'தாய் நாடு' இந்தியாவிற்கும் அவர் வரவில்லை.

ஏன், ஜனவரி மாதத்தோடு பதவி விலகும் ஜனாதிபதி பைடனின் அரசுகூட இனப்பிரச்சினை சார்ந்த விடயங்களில் இலங்கை அரசுக்கு எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை என்பதே உண்மை. கொழும்பில் அமெரிக்க தூதுவரான ஜூலி சங் அம்மையாரும், எதற்கெல்லாமோ கருத்து தெரிவித்து வந்தார். ஆனால், இனப்பிரச்சினை குறித்து பெரிய அளவில் பேசவில்லை. அரசிற்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

பின் என்ன? முன்பு, அண்டை நாடான இந்தியாவில், மன்மோகன் சிங், பின்னர் நரேந்திர மோடி ஆகியோர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ஏதோ, அவர்களை யாழ்ப்பாணத் தமிழர்களும் அவர்களை ஏவும் புலம்பெயர்ந்தோரும்தான் வாக்களித்து தேர்ந்தெடுத்ததாக தங்களுக்குள்ளளேயே மனத்தளவில் கொண்டாடினார்கள். ஆனால், காரியசித்தி அடையவில்லை என்று தெரிந்ததும், 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற பிலாக்கணத்தையும் தங்களுக்குள்ளேயே பகிஜுந்துகொண்டார்கள்.

அது தானே இப்போதும் அரங்கேறப்போகிறது!




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# பிள்ளை வளர்ப்பு

பொதுவாகநம்எண்ணங்களேசெயலாகின்றது. செயலே பழக்கமாகின்றது. பழக்கமே வழக்கமாகின்றது. வழக்கமே ஒழுக்கமாகின்றது. தனி மனித ஒழுக்கமே பண்பாடு ஆகின்றது. பண்பட்ட குழந்தைகளை உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களாகிய நம்மிடம்தான் இருக்கின்றது.

சில பெற்றோர்கள் பிள்ளை மீதுள்ள பிரியத்தில் அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிக்க நினைப்பதுண்டு. அதனால் பிள்ளைகளுக்கு ஒரேயடியாகச் செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டுப் பின்னர் சீரழிந்துபோக நேரிடும். எந்த வயதுக் குழந்தையையும் திட்டவோ அடிக்கவோ கூடாது. அதாவது உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ துன்புறுத்தக்கூடாது.

எந்தக்குழந்தையுடனும் உங்கள் குழந்தையைத் தொடர்புபடுத்திப் பேசாதீர்கள். அது உங்கள் குழந்தைக்கே மனதில் ஏக்கத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் விதைத்துவிடும். குழந்தைக்கு எதிரில் பெரியவர்கள் மரியாதைக் குறைவாகப் பேசக்கூடாது. எல்லோருடைய நல்ல குணங்கள் மட்டுமே குழந்தைகளுக்கு எதிரில் வெளிப்படுத்த வேண்டும். யாரையும் தாழ்த்திப் பேசக்கூடாது.

குழந்தைகளைப் பாராட்டுவது வெகுமதி வழங்குவது போன்றவை அவர்களைக் கெடுத்துவிடும் என்று நம்புவது தவறான ஒன்றாகும். பெரும்பாலும் குழந்தைகள் எதைச் செய்தாலும் அதை விமர்சிப்பதைக் காட்டிலும் நல்லவற்றை எடுத்துக்கூறலாம். குழந்தைகளுக்கும் விருந்தோம்பலைக் கற்றுத்தரவேண்டும். குழந்தைகளுக்கு உறவுகளின் அருமையையும் விட்டுக்கொடுத்தலையும் புரிய வைக்கவேண்டும்.

பிள்ளைகளின் வேலைகளை அவர்களே செய்யப் பழக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகமாவதுடன் நமக்கும் வேலைப்பளு குறையும். அவர்கள் பெரியவர்களாக வளரும்போது மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இருக்காது.

ஆபத்தை விளைவிக்கும் எந்தப் பொருளையும் குழந்தைகளின் கைக்கு எட்டும் தூரத்தில் வைக்கக்கூடாது. அதனால் ஏற்படும் ஆபத்தை அவர்களுக்கு விளக்குவது அவசியமாகும்.

பெற்றோர்கள் தமது குழந்தைகளுடன் முடிந்தளவு நேரம் செலவிடவேண்டும். குழந்தைகளோடு அமர்ந்து பேசவேண்டும். விளையாடவேண்டும். குடும்பத்தோடு அமர்ந்து பேசவேண்டும். குழந்தைகள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். பெற்றோர்கள் 'பிஸி'யாகிவிடுவதால் நிறையக் குழந்தைகள் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து சிகரெட், பாக்கு, போதைப் பொருள் போன்ற பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள். மனதில் உள்ள பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாமல் மன உளைச்சலுக்கும் ஆளாகிறார்கள்.

குழந்தைகளைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரது எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருக்கின்றது. தான் நினைக்கும்படிதான் தன் குழந்தை நடக்கவேண்டும், தான் சொல்வதைத்தான் குழந்தை கேட்கவேண்டும் என்பன போன்ற பல கட்டுப்பாடுகளை குழந்தைகள் மீது திணிப்பதை நாம் பார்த்திருப்போம். பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு மிகவும் தனித்துவமானது என்றாலும்கூட அனைத்துக் குழந்தைகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அவர்கள் வாழும் சூழல் முற்றிலும் வேறுபட்டதாக இ-ருக்கும். இதனால் குழந்தைகள் எதிர்காலத்தில் ஆளுமை இல்லாதவர்களாக மாறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

மேலே கண்ட வகையில் நீங்கள் எந்த வகைப் பெற்றோர் என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்ற பாடல் வரிகளை நாம் கேட்டிருப்போம். அதற்கேற்ப நாம் குழந்தைகளை வளர்க்கவேண்டும். முடிந்த அளவு உங்கள் குழந்தையை வருங்காலத்தில் ஆளுமைமிக்க நபர்களாக மாற்ற இப்போதே செயற்படுங்கள்.

**தெய்வேந்திரம் வஜிதா**



காலைக்கதிர் Kalaikkathir

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொருளாதார நிலை மாற்ற சட்டமூலம், அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் என்பன மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் சிறந்த இடதுசாரிக் கொள்கையுடையவராக வாழ்ந்து, மண்ணோடும், மக்களோடும் வாழ்ந்த நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மண்ணில் இருந்து விடை பெற்றுள்ளார்.

81 ஆவது வயதில் காலமான விக்கிரபாகுவை இந்தச் சபையில் நினைவுகூர்கிறேன். சிறந்த இடதுசாரி கொள்கைவாதியும், நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், ஈழத்தமிழர் உரிமைநிலைப்பாட்டில் இறுதிவரை ஒரேநிலைப்பாட்டைக் கடைப்பிடித்த முற்போக்கு அரசியல்வாதியான விக்கிரமபாகு கருணாரட்னவின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

தமிழர் பிரச்சினையில் ஒரே கொள்கையைக் கடைபிடித்து அது தொடர்பான போராட்டங்களில் முன்னிலை வகித்தவர். சிங்கள தேசிய இனத்தில் பிறந்த இனவாதமற்ற பெருமனிதர். இந்த நல் மனிதரை இந்த தேசம் இழந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, தமிழர்கள் இந்த நாட்டில் தங்களுக்கு உரித்தான தனி தேசமாக வாழ உரித்துடையவர்கள் என்று மிக ஆணித்தரமாக சிங்களவர்களுக்கு எடுத்துரைத்த மிகச் சிறந்த மாமனிதரை தமிழர்கள் இழந்துள்ளனர் என்றறே கருதுகிறோம் - இவ்வாறு சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

## அரச நிதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலத்துக்கு ஆதரவளித்தாலும் அதன் சில சரத்துக்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். அவ்வாறான நிலையில் மாலை 5.30 மணி வரை விவாதம் இடம்பெற்று இறுதியில் சட்டமூலத்துக்கு சபையின் அனுமதியை சபைக்கு தலைமை தாங்கிய பிரதிசபாநாயகர் கோரினார்.

இதன்போது எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலத்துக்கு எமது எதிர்ப்பினை பதிவிடுகிறோம் என தெரிவித்தார்.

அதன் பிரகாரம் குறித்த இரண்டு சட்டமூலங்களும் திருத்தங்களுடன் சபையில் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டதாக பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

## நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நேர்மையான நாடு, சுதந்திரமான நாளை, பசுமை தேசம், புதிய பாதையை அடைய நாம் பாடுபட வேண்டும். அதை வழிநடத்துவதில் முன்னோடியாக இருக்க நான் தயாராகவுள்ளேன்.

இந்தியாவின் அசோகப் பேரரசரால் நிறுவப்பட்ட டெம் எனும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'சவே முனிசா பிரஜா' எனும் பாளி வசனத்தில் குறிப்பிடுவது போல், நாட்டின் ஆட்சியாளர் தமது நாட்டு மக்களை பிள்ளைகள் போல் பராமரிக்கவேண்டும் விடயத்திற்கு மதிப்பளித்து, அதனை யதார்த்தமாக்குவதற்கு தாம் எடுத்துள்ள முயற்சிக்கு உங்கள் ஆசிர்வாதத்தைஎதிர்பார்க்கின்றேன்.

2024 ஜனாதிபதித் தேர்தல் நம் அனைவரின் எதிர்கால தலைவிதியையும் தீர்மானிக்கும் திருப்புமுனையாக அமையும், தாய்நாட்டின் நிலைப்பு அல்லது அழிவை தீர்மானிக்கும் காரணியாக உங்கள் வாக்கு இருக்கும்.

உங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையை நீங்கள் அரசியல்வாதிகளிடம் விட்டுவிட்டதால் இன்று நாம் அனைவரும் ஒரு சோகமான சூழ்நிலையில் இருக்கிறோம். உலகம் மாறுவதை நீங்கள் விரும்பினால், உங்களைத் தவிர வேறு யாராலும் அதனை மேற்கொள்ள முடியாது.

இலங்கை அரசின் வெற்றிக்காகவும், இலங்கை தேசத்தின் வெற்றிக்காகவும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் வேட்பாளராக போட்டியிடுகின்றேன் என்றார்.

## ஆளும்தரப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் குறித்து நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவ்வாறான சட்டமூலம் 2022ஆம் ஆண்டு இயற்றப்பட்டிருந்தால் அப்போதைய ஜனாதிபதி முட்டாள்தனமான தீர்மானத்தை எடுத்து நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியிருக்கமாட்டார்.

எதிர்க்கட்சி என்பதால் நாங்கள் அனைத்தையும் எதிர்க்கபோவதில்லை. இந்தச் சட்டமூலத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்குவோம். இருப்பினும் ஒருசில விடயங்கள் குழுநிலையின்போது திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

இதற்கு முன்னர் அரச நிதி பொறுப்பு தொடர்பான சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் அந்த சட்டத்துக்கு பொறுப்புக்கூறல் அதிகாரம் வழங்கப்படவில்லை. தற்போது உருவாக்கப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்திலும் பொறுப்புக் கூறல் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே சட்டத்தின் ஏற்பாடுகளின் அம்சங்களுக்கு பொறுப்புக்கூறல் அத்தியாவசியமாக்கப்படவேண்டும்.

சட்டமூலத்தின் 15 ஆவது உறுப்புரையில் அரசின் முதன்மை செலவுகளை 13 சதவீதமாக வரையறுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகில் எல்லா நாடுகளிலும் முதன்மை செலவுகளை வரையறுக்கும் சட்டங்கள் காணப்படுகின்றன. 20 சதவீதத்துக்குள்தான் செலவுகள் வரையறுக்கப்படுகின்றன. செலவுகளைகட்டுப்படுத்தவேண்டுமாயின் அரசவருமானத்துக்கும் செலவுகளுக்கும் இடையில் இணக்கப்பாடான தன்மை காணப்படவேண்டும்.

பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். காலையில் ஒன்றை பேசி விட்டு இரவில் பிறிதொன்றை பேசும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தையே நாங்களும் எதிர்பார்க்கிறோம். நற்செய்தி என்று ஆளும்தரப்பு விடுக்கும் அறிவிப்புக்களை மக்கள் தகாத வார்த்தைகளால் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பொருளாதார மீட்சியை நாங்கள் எதிர்ப்பதாக நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் குறிப்பிடுகிறார்கள். பொருளாதார நெருக்கடியின்போது சவால்களை ஏற்றுக் கொள்ளாமல் நாங்கள் தப்பிச் செல்லவில்லை.

2022 ஆம் ஆண்டு நெருக்கடியின்போது அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவைச் சந்தித்து சட்டத்தரணிகள் முன்வைத்த நிபந்தனைகளை முன்வைத்தோம். அவர் அதனை ஏற்கவில்லை. இதனை கோட்டபய ராஜபக்சவிடம் கேட்டுப்பாருங்கள்.

பொருளாதார நிலைமாற்றச் சட்டமூலத்தை ஏற்கப் போவதில்லை. ஏனெனில் இந்தச் சட்டமூலத்தின் இரண்டாம் பந்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை சட்டமாக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆளும்தரப்பு இன்னும் இரண்டு மாதங்களே பதவியில் இருக்கும். ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை திருத்துவதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானியான பீற்றர் ப்ரூவரிடம் எமது கட்சி குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார நிலைமாற்ற சட்டமூலத்தில் பொருளாதார முன்னேற்றத்தின் இலக்கு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும். 2048 ஆம் ஆண்டு அபிவிருத்தியடைவதாக ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது.

மறுபுறம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதத்தால் பொருளாதார வளர்ச்சியை அடைந்துக் கொள்வதாகவும் குறிப்பிடுகிறது. ஆளும் தரப்பின் மதிப்பீட்டுக்கு அமைய அவ்வாறாயின் 2075 ஆம் ஆண்டுதான் அபிவிருத்தியடைய முடியும், ஆகவே இந்தச் சட்டமூலம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் - என்றார்

## அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபருக்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிரப்பித்துள்ள நிலையில், பிரதி பொலிஸ் மா அதிபரை நியமிக்காமல் இருப்பது சந்தேகத்தை எழுப்பி வருகிறது. அதனால் உடனடியாக பிரதிபொலிஸ் மா அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிடுகையில், இந்த விவகாரத்திற்காக ஆளும் தரப்பு வெட்கப்படவேண்டும், பதவிவிலகிச் செல்லவேண்டும் என்றார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

அரசமைப்பு பேரவை நிறைவேற்று ஜனாதிபதியின் ஒரு பகுதி என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பொலிஸ் மா அதிபர் நியமனத்தை ஜனாதிபதியே மேற்கொண்டார். அரசமைப்பின் 21 ஆம் திருத்தத்துக்கு அமைய அரசமைப்பு பேரவையில் நிறைவேற்று அதிகாரிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடுக்க முடியும். அதுதான் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றில் இடம்பெற்றிருக்கிறது. பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தற்போது பொலிஸ் மா அதிபருக்கு இடைக்கால தடை உத்தரவு பிரப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக் கொண்டு அதன் பிரகாரம் செயற்படுவது ஆளும்தரப்பின் கடமை. அதன் பின்னர் தீர்ப்புக்கு எதிராக முறையிடலாம். அவ்வாறு இல்லாமல் வேண்டுமென்றே ஆளும்தரப்பு நீதிமன்ற தீர்ப்பை செயற்படுத்தாமல் காலம்தாழ்த்திவந்தால், ஒட்டுமொத்த அமைச்சரவையும் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடுகின்றது என்றாகின்றது. அதனால் இதுதொடர்பில் ஆளும்தரப்பு அவதானமாக இருக்கவேண்டும்.

அத்துடன் நீதிமன்ற தீர்ப்பில் சட்டமா அதிபருக்கு எதிராகவும் சபாநாயகருக்கு எதிராகவும் விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆளும்தரப்பு வெட்கப்படவேண்டும். அதனால் அட்டை போன்று தொடர்ந்தும் தொங்கிக்கொண்டிருக்காமல் ஆளும்தரப்பு விட்டுச்செல்ல வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்த ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிடுகையில், பிரதிபொலிஸ் மா அதிபர் நியமனத்துக்கு மீண்டும் அரசியலமைப்பு பேரவையை அழைத்து, அதற்கு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவதற்கு இனங்க முடியாது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பொலிஸ்மா அதிபருக்கு தற்போது அந்த சேவையில் ஈடுபட முடியாது. அந்த பதவி வெற்றிடமானால், அந்த இடத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கே இருக்கிறது. பதில் பொலிஸ்மா அதிபர் நியமிக்கும் பொறுப்பு அரசியலமைப்பு பேரவைக்கு இல்லை என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில், பதில் சட்டமா அதிபர் நியமனத்தை ஜனாதிபதிக்கு நியமிக்க முடியுமானால் ஏன் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதிக்கு முடியாது? அதனால் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து, பிரதிபொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு அமைச்சரும் சபை முதல்வருமான சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில், நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் பதில் பொலிஸ் மா அதிபரை யார் நியமிப்பது என்பதில்தான் பிரச்சினை இருக்கின்றது என்றார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் மதிக்கின்றோம். அதில் மாற்றுக்கருத்து இல்லை. பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்காக அனுமதி வழங்கியது அரசமைப்பு பேரவை. அதனால் இது நாடாளுமன்றத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல. பொலிஸ் மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிரப்பித்துள்ள நிலையில் பதில் பொலிஸ்மா அதிபரை யார் நியமிப்பது என்பதில் பிரச்சினை இருக்கிறது. அதனால் அரசமைப்பு பேரவையின் தலைவரான சபாநாயகர் நாட்டுக்குத் திரும்பி வந்த பின்னர்தான் இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும் என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் அன்னப்பறவை சின்னத்தில் பொது வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகா 41 லட்சத்து 73 ஆயிரத்து 185 வாக்குகளைப் (40.15சதவீதம்) பெற்று மகிந்த ராஜபக்சவிடம் (6,015,934 வாக்குகள் 57.88சதவீதம்) தோல்வி அடைந்திருந்தார்.

தேர்தலில் போட்டியிடும் தமது முடிவு தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி வேட்பாளராக நான் களமிறங்கவுள்ளதை இலங்கை மக்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

எம்மை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற திறனற்ற அரசியல் குழுவால் 76 ஆண்டுகளாக நாம் வழிநடத்தப்பட்டோம்.

இலங்கை வளர்ச்சியடைய வேண்டுமானால், ஊழலை ஒழிக்கவேண்டும். எமது வருமானத்தை அதிகரிக்க நாம் எமது இயற்கைவளங்களைப்பயன்படுத்த வேண்டும்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான இலங்கையின் ஜனாதிபதி வேட்பாளராக இது எனது முறையான மற்றும் உத்தியோகபூர்வ அறிவிப்பாகும்.

இலங்கையை முன்னேற்றுவதற்கு என்னுடன் இணையுமாறு ஒவ்வொரு இலங்கையருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன் என்றுள்ளது.

## பிணைமுறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். எரிபொருள் வரிசையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவுக்கு கொண்டு வந்தார், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டார் என்று புகழ்பாடுகிறார்கள். இவர்களால்தான் மத்திய வங்கி பிணைமுறி மோசடி இடம்பெற்றது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பிணைமுறி மோசடி இடம்பெறாமலிருந்திருந்தால் 2022ஆம் ஆண்டு எரிபொருள் வரிசை என்பதொன்று தோற்றம் பெற்றிருக்காது. பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் தமக்கும், வங்குரோத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை போல் பேசுகிறார்கள்.

வங்குரோத்து நிலைக்கும் மத்தியில் ஊழல் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. கொழும்பு ஹில்டன் ஹோட்டலை விற்பனை செய்ய ஆளும்தரப்பு இப்போது தீர்மானித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஹில்டன் ஹோட்டலின் மதிப்பு 120 மில்லியன் டொலர் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் செலவுகளுக்காக ஹில்டன் ஹோட்டலை 41.5 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்ய ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது. ஆளும்தரப்புக்கு இணக்கமானவரே ஹில்டன் ஹோட்டலைப் பெறவுள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அனைவரும் வெளிப்படையாகச் செயற்பட வேண்டும் என்று ஆளும்தரப்பு நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கிறது. ஆனால் ஆளும்தரப்பு வெளிப்படையாகச் செயற்படவில்லை. ஊழல் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை-என்றார்.

## விக்கிரமபாகு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர் அவர்.

2010 ஜனாதிபதித் தேர்தலில் மேசைச் சின்னத்தில் விக்ரமபாகு கருணாரத்ன போட்டியிட்டிருந்தார்.

1943 மார்ச் 8 பிறந்த கேம்பிரிட்ஜ் கல்வியாளரான இவர், இலங்கை விஞ்ஞானியுமாவார்.

அவரது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். அவர் தனது இடைநிலைக் கல்விக்காக கொழும்பு ஆனந்தா கல்லூரிக்குச் செல்வதற்கு முன்னர் மத்துகம ஆனந்த சாஸ்த்ராலயாவில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார் .

அதன்பின் அப்போதைய சிலோன் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான அவர் அங்கிருந்து மின் பொறியியலில் சிறந்த பெறுபேற்றுடன் பட்டத்தைப் பெற்றார்.

கொமன்வெல்த் உதவித் தொகை மூலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்கவாய்ப்புப் பெற்ற அவர், 1970 இல் கலாநிதிப் பட்டத்தை பெற்றார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் இலங்கை வந்த அவர் தனது கல்வி மற்றும் அரசியல், சமூக சேவை வாழ்க்கையைத் முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பு திட்டத்தை உருவாக்குதல், கணக்காய்வாளர் நாயகத்தின் சட்ட அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்துதல், 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் திருத்தம் செய்தல் உள்ளிட்ட விடயங்களும் இந்த நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிக்கலான கணக்காய்வுகளின்போது முழுமையான அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் ஊழல், மோசடி தொடர்பிலான குற்றவியல் விசாரணைக்காக, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுடன் அடிப்படை தகவல்களை கணக்காய்வாளர்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## ஊழல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் பகிர்ந்துகொள்ள அனும திக்கும் வகையில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய சரியான பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய தலைமைக் கணக்கியல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து அது தொடர்பான கூடுதல் கட்டணத்தைஅறவிடுவதற்கானஅதிகாரத்தைகணக்காய் வாளருக்கு வழங்குவதற்கான பரிந்துரைகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பட்டுள்ளன.

ஒரு பயனுள்ள மற்றும் வெளிப் படையான சொத்து விபரத்தை வெளிப்படுத்தல் மற்றும் இணக்கப் பாட்டுக்கான நிறுவன கட்டமைப்பு தொடர்பிலான முன்மொழிவுகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளட் டக்கப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முரண்பாடுகள் தொடர்பிலானவிதிமுறைகள்,அவற்றைநிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல் களை வழங்குதல் மற்றும் அவ்வாறு செய்யத் தவறிய அதிகாரிகளின் தண்டனை உள்ளிட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஊழல் தடுப்புச் சட்டத்திற்கு அமைவாக இந்த சொத்து விவரங்கள் வெளியிடுவதற்கான இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு இந்த வேலைத்திட்டத்தினை ஆறு மாதங்கள் அல்லது வருடத்திற்கு ஒரு முறை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றம் மற்றும் பணமோசடி மூலம் பெறப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான தேசிய படிமுறைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களின்பிரகாரம், முறையானசெயற்பாட்டிற்குத் தேவையான ஆதரவை வழங்குதல் மற்றும் புதிய விசாரணைகள் மூலம் முறையான வழக்குத் தொடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல், அரசியல் ரீதியாக வெளிப்படுத்தப்படும் நபர்களை (Politically Exposed Persons) அடையாளம் காண்பது போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய நிகழ்ச்சி நிரல் ஊழல் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இது ஒரு நிறுவனத்தின் உரிமையைப் பற்றிய தகவல்களை பெற்றுகொள்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான நியதிகளை உருவாக்குவதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த பொதுப் பயன்பாட்டிற்கான பதிவேடு ஒன்றை உருவாக்கவும் வழிவகுக்கும்.

அரச பெறுகைச் செயற்பாடுகளின்போது வெளிப்ப டைத்தன்மையை உறுதி செய்வதற்காக, சர்வதேச தரத்திற்கு ஏற்ப அரச பெறுகை சட்டத்தை (ஊெற்ஹுயிஷ்உ ஊஷலிஉற்ஷளதுளஜமி ஸிழிழ) அமுல்படுத்தவும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான பெறுகை ஒப்பந்தங்கள் குறித்த தகவல்களை வெளியிடுவது தொடர்பிலும் ஊழல் தடுப்பு நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டுள்ளது.

வரி விலக்கு செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயர்களை பிரசித்தப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான சரியான செயல்முறை உருவாக்கப்படும் வரை, மூலோபாயமேம்பாட்டுத்திட்டச்சட்டத்தைதற்காலிகமாக இடைநிறுத்துதல், பயிற்சி பெற்ற மற்றும் சுயாதீனமான பணியாளர்களைகூஞ்; கொண்டிருக்கும் வகையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், வருமானம் ஈட்டும் அரச நிறுவனங்களுக்குள் தற்காலிகமாக ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பது உள்ளிட்ட சாத்தியமான செயற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் நேரடி நிர்வாகத்தை முடிவுக்குக்கொண்டுவரும்சேமலாபநிதியத்திற்காகபுதிய முகாமைத்துவக் கட்டமைப்பைநிறுவுதல், நிறைவேற்று மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையை மேம்படுத்துவதன் மூலம் அரச உரித்துள்ள வங்கிகளுக்கு இடையில் கூட்டுதாபன நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல், நீதிச் சேவை ஆணைக்குழுவை பலப்படுத்தல் உள்ளிட்ட முன்மொழிவுகளும் இதற்குள் அடங்கியுள்ளன.

தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல், தகவல் அறியும் உரிமையை வலுப்படுத்துவது தொடர்பான நியதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

2024 மே 29 சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது மீளாய்வின் முன்னேற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில்கொண்டு, நாட்டில் முழுமையாக ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தையும் இந்த நிகழ்ச்சி நிரல் முன்மொழிந்துள்ளது.

இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு, அரச வருமான நிர்வாகம், அரச நிதி முகாமைத்துவம், அரச சொத்துக் கண்காணிப்பு மற்றும் நிர்வாகம், பணத்தூய்தாக்கலை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை தடுத்தல் உள்ளிட்ட விடயங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.




# முஸ்லிம்களின் ஜனஸாக்கள் எரிக்கப்பட்டதற்கு அரசு மன்னிப்புக் கேட்பது வெறும் கண்துடைப்பு

## சாடுகிறார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

இதுவெறும்கண்துடைப்புஎன்பதைஅனைவரும் விளங்கிக்கொள்ளவேண்டும். மன்னிப்பு கோரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்த இந்த மூன்று அமைச்சர்களும் அன்று ஆளும்தரப்பின் பங்காளிகளாக இருந்தார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதனன்று இடம்பெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தில் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தின் உடல்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமையால் முஸ்லிம் சமூகத்தின் மனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மன்னிப்பு கோரும் வகையில் அமைச்சர்களான அலி சப்ரி,விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்தஅமைச்சரவைபத்திரத்துக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை தற்போது பரவலாக பேசப்படுகிறது.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இவ்வாறான அறிவிப்புக்களை விடுத்து மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இது வெறும் கண்துடைப்பு என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ளவேண்டும். மன்னிப்பு கோரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்த இந்த மூன்று அமைச்சர்களும் அன்று ஆளும்தரப்பின் பங்காளிகளாக இருந்தார்கள்.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு செயற்படுகிறார்கள். முஸ்லிம் சமூகம் மிக் தெளிவாக உள்ளது என்பதை இவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். கொவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களில் 276 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டுள்ளன.இதனால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் துடித்தார்கள்.கண்ணீர் சிந்தி கதறி அழுதார்கள்.அக்காலப்பகுதியில் ஒட்டுமொத்தமுஸ்லிம்களும்சொல்லனாதுயரங்களை எதிர்கொண்டார்கள்.

பவந்தமான தகனம் என்ற இழிவான செயற்பாட்டை ஆளும்தரப்பு கடுமையாக முன்னெடுத்தது.கோட்டபய ராஜபக்ச ஆளும்தரப்பு மனசாட்சியில்லாமல் செயற்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிமற்றும்அவரதுஅமைச்சின்உறுப்பினர்கள் ஜனாஸா எரிப்புக்கு இணக்கம் தெரிவித்தார்கள். ஆகவே தற்போது மன்னிப்பு கோருவது எம்மை ஏமாற்றும் செயற்பாடு.

பலவந்தமான முறையில் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள போதும் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜனாஸா தகனத்துக்கும் ராஜபசக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை காண்பிக்கும் வகையில் ஜனாதிபதி அண்மையில் சபையில் உரையாற்றினார். தேர்தலுக்காக எமது சமூகத்தை ஏமாற்றுவதை உடனடியாக நிறுத்தவேண்டும். இலங்கையில் வாழும் ஒவ்வொரு முஸ்லிம்களின் காலிலும் விழுந்து மன்றாடி மன்னிப்பு கோரினாலும் மன்னிக்க முடியாத அளவுக்கு இந்தச் சம்பவம் காணப்படுகிறது.

தேர்தலுக்காகவே பொய்யான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறன. சிங்களவர்களால் தெரிவு செய்யப்பட்டேன் என்று ஆணவத்துடன் செயற்பட்ட ஜனாதிபதியை சிங்கள மக்களே விரட்டியடித்தார்கள்.பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என்றார்.

### முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்காமல்

# விதாகம வீதியை திட்டமிட்டவாறு அபிவிருத்தி செய்து தாருங்கள்

## லலித் எல்லாவல எம்.பி. வலியுறுத்து

அட்டுலுகம விதாகம வீதியைத் திட்டமிட்டவாறே முழுமையாக அபிவிருத்தி செய்து தாருங்கள். வீதி அபிவிருத்திக்காக தமது காணிகளை மனமுவந்து விட்டுத் தந்த முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்துவிடாதீர்கள் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, தெளிவுபடுத்தலின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அட்டுலுகம விதாகம வீதி அபிவிருத்திக்காக அந்தப் பிரதேச முஸ்லிம் மக்கள் எந்தவித நட்டஈடும் பெற்றுக்கொள்ளாமல் தமது வீடுகளையும் பாதுகாப்பு மதில்களையும் அகற்றி சந்தர்ப்பம் வழங்கியுள்ள நிலையில் தற்போது அந்த வீதியின் இரு மருங்கிலும் வாய்க்கால் கட்டமைப்பு ஏற்படுத்தப்படாமல் வேறுமனே தார் மாத்திரம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவே தெரிய வருகிறது. அவ்வாறு இடம்பெறுமானால் இது அந்த பிரதேச முஸ்லிம் மக்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்கு செய்யும் பெரும் அநீதியாகும்.

இலங்கையில் அடுலுகம முஸ்லிம் மக்கள் மாத்திரமே எந்த நட்டஈடும் கோராமல தங்களின் வீடு, பாதுகாப்பு மதில்களை அகற்றி, வீதி அபிவிருத்திக்காக எங்களுக்கு இந்த இடவசதியை வழங்கி இருக்கிறார்கள். அதனால் இந்த மக்களுக்கு செய்யும் கௌரவமாக, இந்த வீதி அபிவிருத்திக்காக மதிப்பிடப்பட்ட பிரகாரம் குறித்த வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தில் 3 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் அல் கஸ்ஸாலி வித்தியாலயம் அமைந்திருக்கிறது.

குறித்த வீதி அபிவிருத்தி நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதால், மாணவர்கள் உள்ளிட்ட பாதசாரிகள் அந்த வீதி ஊடாக பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் குறித்த வீதியை விரைவாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதற்கு போக்குவரத்து அமைச்சர் சார்ப்பாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் தவணை இடைநிறுத்தப்பட்டுள்ளதால், குறித்த வீதி அபிவிருத்தி நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் ஆயிரம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த வீதியை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது அந்த நடவடிக்கை இடம்பெற்று வருகிறது - என்றார்.

### விவசாய நவீனமயமாக்கலால்

# அரசியல் கையாட்களாக இனி விவசாயிகளை மாற்றமுடியாது

## அமைச்சர் மகிந்த அமரவீர கருத்து

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் காரணமாக தொடர்ந்தும் விவசாயிகளைஅரசியல்கையாட்களாக மாற்ற முடியாது என்று கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்மகிந்தஅமரவீரதெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2021 பெரும்போகத்தில் உர நெருக்கடி காரணமாக, நெல் உற்பத்தி தடைப்பட்டது. எனவே 2022ஆம் ஆண்டு இந்நாட்டு மக்களின் நுகர்வுக்குப் போதுமான அரிசி உற்பத்தி செய்யப்படவில்லை.அதன்மூலம்ஒருகிலோஅரிசியின் விலை 500 ரூபாவைத் தாண்டும் எனச் சிலர் ஊடகச் சந்திப்புகளில் தெரிவித்தனர்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆளும்தரப்பு நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் உள்நாட்டு நெல்உற்பத்தியை அதிகரிப்பதற்கு சாத்தியமான அனைத்துநடவடிக்கைகளையும் எடுத்தன. 2022 சிறு போகத்திற்கு தேவையான யூரியா உரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பெரும் போகத்தில் நெல் உற்பத்திக்கு உரம்கொள்வனவுசெய்ய ஹெக்டெயாருக்கு 20,000 ரூபாய் நிதி மானியம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டில் ஆளும்தரப்பு அரிசியை இறக்குமதி செய்யவேண்டிஏற்படவிலை. 2023இல் இலங்கையில் நெல் உற்பத்தி 4.5 மில்லியன் மெட்ரிக் தொன்களாகும். நம்நாட்டில்ஆண்டுக்கு 2.4 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி தேவை. 2023 ஆம் ஆண்டில், நெல் அறுவடையில் இருந்து சுமார் 3 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசியை உற்பத்தி செய்தோம்.

அதன்படி கடந்த ஆண்டு நம் நாட்டில் அரிசி மேலதிகமாக இருந்தது. விவசாயிகள் எங்களை நம்பி எமது அறிவுரைப்படிசெயற்பட்டனர். அதனால் தான் இந்த நாட்டில் இன்னும் அரிசி மேலதிகமாக இருக்கிறது.

மேலும், கடந்த காலங்களில் சோளத்திற்கு பற்றாக்குறை இருந்ததால், கால்நடை தீவன உற்பத்திக்காக சுமார் 100,000 மெட்ரிக் தொன் அரிசியையும் வழங்கினோம். கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு கால்நடைத் தீவனமாக அரிசியை வழங்குவதன் மூலம், எமது நாடு சோளத்தை இறக்குமதி செய்ய செலவழித்த பணத்தை மிச்சப்படுத்த முடிந்தது.

5 போகங்களில் நெல் விளைச்சலை இரட்டிப்பாக்குவதே எமது இலக்காகும். இதன்படி, நெற்செய்கைக்கு புதிய விவசாயதொழில்நுட்பத்தைஅறிமுகப்படுத்தி ஹெக்டெயார் ஒன்றின் விளைச்சலை 9 மெற்றிக் தொன்களாக அதிகரிப்பதே எமது இலக்காகும். அதற்கான தொழில்நுட்பத்தொகுதிகளைஅறிமுகப்படுத்தவுள்ளோம் என்பதைக் கூற வேண்டும். அத்துடன் அநுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, கண்டி ஆகிய விவசாயப் பிரதேசங்களில் அடுத்த 5 போகங்களில் நெல் விளைச்சலை இரட்டிப்பாக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம்.

சிறுபோகம்முடிந்தவுடன்மூன்றாம் போகத்தில் இடைப் பயிர்ச்செய்கையை உடனடியாகத் தொடங்க விவசாயத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான சிறு போகம் முடிவடைந்தவுடன் பயறு பயிரிடும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். 2024 சிறு போகத்தில் இதுவரை 4464 ஹெக்டெயார் பயறு பயிரிடப்பட்டுள்ளது. இதன்மூலம்எதிர்பார்க்கப்படும்உற்பத்தி 6500 மெற்றிக் தொன்களாகும்.

மூன்றாவது போகமாக இடைப்பட்ட போகத்தில், 8943 ஹெக்டேரில் பயறு பயிரிடுகிறோம். இதனால், 6707 மெட்ரிக் தொன் பயறு விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டு 13,407 ஹெக்டேரில் பயறு பயிரிடப்பட்டுள்ளது. 13,207 மெட்ரிக் தொன்விளைச்சல்எதிர்பார்க்கப்படுகிறது.

வருடாந்த பயறு தேவையில் 75 வீதத்தை சிறு போகத்தில் பெறுவதே எமது நோக்கமாகும். இந்நாட்டில் ஆண்டுக்கு தேவைப்படும் பயறு 20,000 மெட்ரிக் தொன்களாகும். சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் பயறு பயிரிடுவதன் மூலம் 18,828 மெட்ரிக் தொன் விளைச்சலை எதிர்பார்க்கிறோம். மேலும், இடைப்பட்ட போகத்திற்கு 01 ஹெக்டெயாருக்கு 25 கிலோ விதை பயறுகளை இலவசமாக வழங்குகிறோம்.

இதன்படி, 01 ஹெக்டெயாருக்குபயறு பயிர்ச்செய்கைக்கு ஒரு விவசாயிக்கு 25,000 ரூபா பெறுமதியான பயறு விதைகள் வழங்கப்படும். பயறு இறக்குமதியைகட்டுப்படுத்தும்வகையில் இறக்குமதி வரி விதிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் உள்நாட்டு பயறுவிவசாயியையும்பாதுகாக்கலாம். மேலும் அரசுக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களையும் ஒரே நிறுவனமாக மாற்றினோம்.

அதன்படி, அதன் பலனை விவசாயிகளுக்குவழங்கமுடிந்துள்ளது. இதனால் 05 வகையான உரங்களின் விலையை 1500 முதல் 2000 ரூபா வரை குறைக்க அரச உர நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கறுவா மற்றும் தென்னை பயிர்ச்செய்கைக்கும் இந்த சலுகையை வழங்குவதுடன், தேயிலைக்கான உரங்களின் விலையையும் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயிகளின் பிரச்சினைகள் அரசியல் கோசங்களாக மாற்றப்பட்டுள்ளன. அது பல்வேறு போராட்டங்களுக்கு அவர்களைத் தூண்டியது. ஆனால், தற்போதைய ஆளும்தரப்பு உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துவதற்காகத் தொடங்கியுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் காரணமாகதொடர்ந்தும்விவசாயிகளை அரசியல் கையாட்களாக மாற்ற முடியாது - என்றார்.

# ஜனாதிபதித் தேர்தல் கட்டுப்பணத்தை ரூ. 30 லட்சமாக உடன் அதிகரிக்குக

## டலஸ் அழகப்பெரும எம்.பி. வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவருக்காகச் செலுத்தப்படும் கட்டுப்பணத்தை 30 லட்சம் ரூபா வரை அதிகரிக்குமாறு எதிரணியின் சுயாதீன உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்தது. இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1981 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க தேர்தல் சட்டத்துக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணமும், சுயாதீன வேட்பாளரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணமும் அறவிடப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளரிடமிருந்து அறவிடும் கட்டுப்பணத்தை 25 இலட்சமாகவும், சுயாதீன வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 இலட்சமாகவும் திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள்.இரண்டு வேட்பாளர்களை தவிர ஏனைய வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டது.எவ்விதமான வரையறைகளும் இல்லாமல் வேட்பாளர்கள் முன்னிலையாகுவதால் அரச நிதியே வீண்விரயமாக்கப்படுகிறது.

41 ஆண்டுகளுக்கு பின்னரே கட்டுப்பணம் தொடர்பில் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 22ஆவது திருத்தம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல் கட்டுப்பணம் விவகாரத்திலும் கவனம் செலுத்தி திருத்தம் ஒன்றை முன்வைக்குமாறு வலியுறுத்துகிறேன்.

இதற்கு எழுந்து மூலம் பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை அவசரமாகக் கொண்டு வரவில்லை. சட்டத்தையோ அல்லது சட்டத் திருத்தத்தையோ விரைவாக கொண்டு வர முடியாது. கட்டுப்பணம் தொடர்பான திருத்தத்தை இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்வைக்க முடியாது. அதற்கான காலவகாசம் போதாது. 2029 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தலாம் - என்றார்.

# ஓய்வுபெறுவோர் சம்பளம் தொடர்பில் ஆளும் தரப்பு தவறாக வழிநடத்தல்

## எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கான திருத்திய சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் ஒன்றும் உயர் நீதிமன்றத்தில்ஒன்றுமாககருத்துக்களைத்தெரிவித்து அனைவரையும் தவறாக வழிநடத்துகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து புதன்கிழமை உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2016 - 2020 காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் முன்னாள் ஜனாதிபதி கேர்ட்டாபய ராஜபக்ச தலைமையிலான ஆளும்தரப்பு பதவிக்கு வந்ததன் பின்னர் நீக்கப்பட்டது.

இதில் ஒரு இலட்சத்து பத்தாயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து இருபதாயிரம் வரையிலான ஓய்வூதியம் பெறுவோர் பாதிப்படைந்தனர். இவர்களில் சுமார் 15,000 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பின் ஓய்வூதிய திருத்தம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என இன்றைய ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. ஆனால், பாதிக்கப்பட்ட 241 ஓய்வூதியம் பெறுநர்கள் இணைந்து தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சம்பள நி-லுவையோடு 2025 -2026 ஆம் ஆண்டில் ஓய்வு பெறுவோருக்கு இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதாக ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது.

ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்க வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில்வழங்கியபதிலையே ஆளும் தரப்பு நாடாளுமன்றத்திலும் தெரிவிக்க வேண்டும். ஆனால் ஆளும்தரப்பு உயர் நீதிமன்றத்தில் ஒரு பதிலையும் நாடாளுமன்றத்தில் மற்றொரு பதிலையும் வழங்கியுள்ளது. இதனால், நாடாளுமன்றமும், நாடும், ஓய்வுபெற்ற சமூகமும் தவறாக வழிநடத்தப்பட்டு வருகின்றன.

ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு தொடர்பான ஓய்வூதிய திருத்தம் தொடர்பில் தற்போதைய ஆளும் தரப்பு எவ்விதஉறுதியானதீர்மானத்தையும்எடுக்காதுள்ளது. ஆனால்ஓய்வூதியம்பெறுவோருக்குஇழைக்கப்பட்ட பெரும் அநீதியை நான் திருத்தியமைத்துத் தருவேன் - என்றார்.

# ஜப்பானின் கடன் திட்டங்கள் மீண்டும் தொடங்கப்படும்

இலங்கையில் ஜப்பானின் கடன் திட்டங்களுக்கானபணக்கொடுப்பனவை மீண்டும் தொடங்குவதற்கான அதன் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்தது

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவிற்கும் இலங்கைக்கும் இடையிலானபுரிந்துணர்வுஒப்பந்தம்கையொப்பமிடப்பட்டதைத் தொடர்ந்தும், கடன் மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையை விரைவாக முடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் விருப்பம்தெரிவித்ததைத்தொடர்ந்தும், 2022 ஆம் ஆண்டு இலங்கையின் கடனைத்திருப்பிச்செலுத்தாததிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஜப்பானின் நிதியிலான கடன் திட்டங்களுக்கான பணக்கொடுப்பனவை மீண்டும் தொடங்கஜப்பான்அரசாங்கம்உத்தியோகபூர்வமாக முடிவு செய்துள்ளது.

இலங்கை அரசாங்கம், ஜப்பான் தூதரகம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் இலங்கை அலுவலகம்ஆகியவைஇணைந்துஇந்த முடிவை நிதி அமைச்சில் ஆரம்பித்து வைப்பதற்காக கூட்டாக செய்தியாளர் சந்திப்பை புதன்கிழமை நடத்தின.

நாட்டை மீண்டும் ஒரு நிலையான பாதைக்கு வழிநடத்துவதற்கு அவசியமான விரிவான பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அதிகாரிகளின்தொடர்ச்சியானமுயற்சிகளுக்காக தூதுவர் மிசுகொஷி பாராட்டினார்.

இடைநிறுத்தப்பட்டஅனைத்துயென் கடன் திட்டங்களும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் முக்கியமான உட்கட்டமைப்புகளாகும் என்றும், இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் தொடர்ச்சியான மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துபவை என்றும் அவர் கூறினார்.

ஜெய்க்காஇலங்கைஅலுவலகத்தின் பிரதம பிரதிநிதி யமடா டெட்சுயா சார்பாக, சிரேஷ்ட பிரதிநிதி இதெயூரி இந்த தீர்மானம் தொடர்பாக ஜெய்க்காவின்தலைவர்டாக்டர்தனகா அகிஹிகோவிடமிருந்து ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு முகவரியிடப்பட்ட உத்தியோகபூர்வ கடிதத்தை நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவிடம் கையளித்தார்.

யென் கடன் திட்டங்களின் மீள ஆரம்பம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், நீண்டகால நிலையான வளர்ச்சியை நோக்கிய வேகத்தைப் பெறுவதற்கும் உதவும் என்று யூரி நம்பிக்கை தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் சிறிவர்தன கடன் மறுசீரமைப்பில் ஜப்பானின் சிறந்த முன்முயற்சி மற்றும் நீண்ட கால அர்ப்பணிப்பை பாராட்டி இந்த தீர்மானத்திற்கு தனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்தார். யென் கடன் திட்டங்களுக்கான பணக்கொடுப்பனவு மீண்டும் தொடங்குவதானது ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவதுடன், இந்தத் தீவு தேசம் பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் திரும்பி இந்தியப்பெருங்கடலில்ஒருமையமாகச் செயற்பட்டு தன்னைத் தானே முன்கொண்டு வர உதவும் என்று நம்பப்படுகிறது.

# காணி உறுதிப்பத்திர வழங்கல் தேர்தல் காலத்திலும் தொடரும்

## அது அரசியல் வேலைத் திட்டமல்ல என்கிறார் காணி அமைச்சு செயலர்

முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரம் வழங்கும் 'உறுமய' வேலைத் திட்டம் அரசியல் வேலைத்திட்டம் அல்ல எனவும் எனவே தேர்தல் காலங்களிலும் இத்திட்டம் தொடர்ந்தும் செயற்படும் எனவும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்றதொனிப்பொருளில்ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த இரண்டு வருட காலப்பகுதியில் இலங்கை மக்களுக்கான மிக முக்கியமான வேலைத்திட்டமான 'உறுமய' காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் எமது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க எதிர்பார்த்துள்ளோம். இதுவரை100,000இற்கும்மேற்பட்டவிண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

'உறுமய'வேலைத்திட்டம்என்பதுபலகட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு தொடர்ச்சியான வேலைத்திட்டமாகும். அதன் முதற்கட்டமே தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒருபோதும் அரசியல் வேலைத்திட்டம் அல்ல. தேர்தல் காலங்களில்கூட இந்தக் காணி உறுதிகள் வழங்கப்படும். ஆனால் அதற்கு அரசியல் தலையீடு இருக்காது.

பிரதேச செயலாளரின் ஊடாக வழங்கப்படும் ஏனைய சேவைகளைப் போன்று இந்தக் காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்படுகின்றன. எனவே, தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது, இந்த திட்டத்தை நிறுத்துவதற்கு ஒரு காரணமாக இருக்காது. இந்தத் திட்டம் எந்த தேர்தல் சட்டத்தையும் மீறாது.

ஏனெனில்,இந்தகாணிஉறுதிகள்தேர்தல்காலத்தில் பொது மேடைகளிலோ அல்லது அரசியல்வாதிகளின் பங்களிப்புடனோ வழங்கப்படுவதில்லை. காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் செயல்முறையை மேலும் திறம்படச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு ஊக்கத்தொகைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன - என்றார்.

இது தொடர்பில் காணி ஆணையாளர் நாயகம் பந்துல ஜயசிங்க தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்குள் இந்நாட்டில் அமுல்படுத்தப்பட்ட புரட்சிகரமான வேலைத்திட்டம் 'உறுமய' வேலைத்திட்டம் ஆகும். இந்த உறுமய திட்டத்தின் மூலம் முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதால் இலங்கை மக்கள் தங்கள் காணிகளை சிக்கலின்றி அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது புதிய உறுதிகள் அல்ல. இதுவரை காணிக்காக வழங்கப்பட்ட ஜயபூமி, ஸ்வர்ணபூமி அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாக காணி உறுதிப் பத்திரங்கள் மக்களுக்கு வழங்கப்படுவதுதான் இதன்போது இடம்பெறுகிறது. இதற்காக சுமார் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் சுமார் 20,000 முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள்வழங்கப்பட்டுள்ளதுடன்,இவ்வருட இறுதிக்குள் 50,000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இதுதவிர, சிறப்பு நிலச் சட்டத்தின் திருத்தம் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரச நிலங்களை நீண்டகால குத்தகைக்கு வழங்கும் முறையைத் திருத்துதல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

# கிழக்கு ஆசிரிய உதவியாளர்களின் நியமனம் பற்றி அமைச்சரின் பதில்

கிழக்கில் உள்ள கணித, விஞ்ஞான பாட ஆசிரிய உதவியாளர்கள் கல்வி அமைச்சுக்குத் தமது கோரிக்கையை முன்வைக்கும்பட்சத்தில் அவர்களை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குவது குறித்து ஆசிரியர் சேவை யாப்புக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

''2014 ஆம் ஆண்டு கிழக்கில் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் வகையில் தகைமையுடைய ஆசிரிய உதவியாளர்கள் அதற்காக நியமிக்கப்பட்டாகள்.

அவர்கள் ஆசிரிய பயிற்சிகளைக் கோரியுள்ளபோதும்அதற்கானவாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு சென்றால் வகுப்பறைகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமற் போவர் என்பதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அந்தவகையில் 2014 ஆம் ஆண்டு அவ்வாறு இணைத்து கொள்ளப்பட்டவர்கள். கடந்த 10 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இதுவரை அவர்கள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவில்லை.

தற்போது மத்திய மாகாணத்தில் இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களும் அவ்வாறு தம்மை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். அவர்கள் தொடர்பில் கல்வியமைச்சு எத்தகைய நடவடிக்கை எடுக்கவுள்ளது'' என்று ரோகினி குமாரி கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, ''அவர்கள் கல்வி அமைச்சுக்குக் கோரிக்கை வைத்தால் ஆசிரியர் சேவை யாப்புக்கு இணங்க அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கல்விமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கும்'' என்றார்.

## வருவாய் நிர்வாக முகாமை தகவல் முறை குறித்த

# அமைச்சரவை உபகுழு அறிக்கை ஜனாதிபதியி ரணிலிடம் கையளிப்பு

வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையை (யூபுனிஞூறீ) எவ்வாறுதிறம்படப் பயன்படுத்துவது என்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 'வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை -பராமரிப்பு சேவைகளைப் பெறுதல்' என்ற அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய 2024 ஏப்ரல் 8 அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையிலான இந்த உபகுழுவில் அமைச்சர்களான டிரான் அலஸ் மற்றும் நளீன் பெர்னாண்டோ ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பின் திறம்படப் பயன்பாடு தொடர்பான உடனடித் தலையீட்டின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு இந்த அறிக்கையில் 7 முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# ஊடகவியலாளர்களும் தபால் மூலமாக வாக்களிக்க அனுமதிக்கப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றில் கோரிக்கை

ஊடகவியலாளர்களும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நடைபெறவுள்ளது. தேர்தல் காலங்களில் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. நாட்டில் 17 பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி சேவைகள் உள்ளன. அதேபோல் 52 வானொலி அலைவரிசை மற்றும் பத்திரிகைககள் சேவைகள் உள்ளன.

தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கை மற்றும் ஒளிபரப்புபணிகளில்ஈடுபடுவதால்அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. ஆகவே அங்கீகரிக்கப்பட்டஅடையாளஅட்டைஉள்ளஊடகவியலாளர்களுக்கு தபால் மூல வாக்களிப்புக்கு அனுமதி வழங்கவேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும். நாடாளுமன்றத்தின் ஊடாக இந்த யோசனையை நாங்கள் முன்வைக்கிறோம் என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2024இல் வெளியிடப்பெற்றது